திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## திருமங்கலத்தில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி, திருமங்கலத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வட்டாட்சியர் அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் செயலர் பா. ரவி தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நெல்லுக்கு ரூ. 25 ஆயிரம், கரும்புக்கு ரூ. 40 ஆயிரம், புன்செய் பயிருக்கு ரூ. 10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும் எனவும் கோஷமிட்டனர். விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் கே. அய்யாவு,செயலர் எஸ்.விஸ்வநாதன்,தாலுகா குழு உறுப்பினர்கள் ஆர். நாராயணன்,பாண்டியம்மாள் மற்றும் பலர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

வறட்சி பாதிப்பு: நிவாரணம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்
வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தி போடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கக் கோரியும், தமிழகத்திற்கு மத்திய அரசு ரூ. ஆயிரம் கோடி நிவாரணம் வழங்க வலியுறுத்தியும், தேனி மாவட்டம்

போடி பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் குறித்து கணக்கெடுத்து நிவாரணம் வழங்க வலியுறுத்தியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், விவசாய தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் போடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு திங்கள்கிழமை நடைபெற்றது.

விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எல்.ஆர்.சங்கரசுப்பு தலைமை வகித்தார். விவசாய சங்க மாவட்ட நிர்வாகி எம்.பாக்கியலட்சுமி, தாலுகா செயலாளர் எஸ்.செல்வம், விவசாய தொழிலாளர் சங்க மாவட்டக் குழு உறுப்பினர் வேலவன், தாலுகா செயலாளர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் மூக்கையா, விவசாய தொழிலாளர் சங்க தாலுகா தலைவர் முருகவேல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் எஸ்.கே.பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஆர்பாட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட நஞ்சை விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரம், புஞ்சை விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும், காபி விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும். காபி கிலோ 1-க்கு ரூ.200 விலை வைத்து கொள்முதல் செய்ய

வேண்டும், போடி பகுதி வன நிலங்களுக்கு வன உரிமைச் சட்டத்தின் கீழ் நிலத்தை சொந்தமாக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷமிட்டனர்.

## கடனை தள்ளுபடி செய்யக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தில் விவசாயிகள் பெற்ற கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விருதுநகர் வட்டாட்சியர் அலுவலக வளாகம் முன்பு நன்செய் மற்றும் புன்செய் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் விரைவில் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தியும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு ஒன்றியத் தலைவர் பெருமாள்சாமி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் விஜயமுருகன், மாநில பொதுக்குழு உறுப்பினர் மங்கையர்கரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாநிலச் செயலாளர் சண்முகம் பேசுகையில், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டதால் மானாவாரி மற்றும் பம்ப்செட் மூலம் பயிரிட்ட விவசாயம் அனைத்தும் காய்ந்து கருகின. இதற்கான வறட்சி நிவாரணம் விவசாயிகள் பயிரிட்ட பரப்பளவின் அடிப்படையில் உதவித் தொகை வழங்க வேண்டும். இதனை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களை முற்றுகையிட்டு போராடி வருகின்றனர். இந்நிலையில் வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிடுவதற்காக தமிழக அரசு ஆய்வுக் குழுவினரை அனுப்பி வைத்தனர். அவர்கள் குறிப்பிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் மட்டும் பார்வையிட்டு ஆய்வு செய்து சென்றுள்ளனர். இதேபோல், அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று, பாதிக்கப்பட்ட பயிர்களின் விவரங்களை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

அதற்கு முன்னதாக மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் நிவாரண நிதியாக ரூ. 2500 கோடி ஒதுக்க வேண்டும். தமிழக அரசு விவசாயிகள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும், இடைப்பட்ட காலத்தில் வேலையிழந்த விவசாய தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## வறட்சி நிதி கோரி விவசாயிகள் போராட்டம்

ராஜபாளையத்தில் திங்கள்கிழமை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கக் கோரியும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரியும் ராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மனு கொடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பில் நடந்த இப்போராட்டத்துக்கு விவசாயிகள் சங்க ராஜபாளையம் மேற்கு ஒன்றியச் செயலாளர் நீராத்திலிங்கம் தலைமை வகித்தார். விவசாயதொழிலாளர் சங்க ராஜபாளையம் மேற்கு ஒன்றியச்செயலாளர் கனகராஜ் முன்னிலை வகித்தார். விவசாய சங்க மாவட்டத் தலைவர் குருசாமி ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார்.

போராட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கவேண்டும். மத்திய அரசு தமிழகத்துக்கு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ. 1000 கோடி நிதி வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். தமிழகத்தில் வறட்சியால் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளுக்கு நிவராண நிதி தலா ரூபாய் பத்துலட்சம் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்து, வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிவகாசி ஒன்றியக் கிளை சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிவகாசி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அந்த அமைப்பின் ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

உடுமலையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கக் கோரி, உடுமலை மத்திய பேருந்து நிலையம் அருகே திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கமும் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு சங்க நிர்வாகி எம்.செல்வராஜ் தலைமை வகித்தார்.

"காய்ந்து பட்டுப்போன தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரமும், காய்ப்புத் திறனை இழந்த மரத்துக்கு ரூ.2 ஆயிரமும், விவசாயம் செய்ய முடியாமல் தரிசாக உள்ள நிலம் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும் வழங்க வேண்டும்.

பருவ மழை முற்றிலும் பொய்த்துவிட்டதால் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை அண்டை மாநிலங்களில் இருந்து பெற வேண்டும். விவசாயிகளுக்கு போதுமான அளவில் தீவனங்களை மானிய விலையில் அரசு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.மதுசூதனன், துணைச் செயலாளர் ஏ.பாலதண்டபாணி, வட்டாரச் செயலாளர் கே.சி.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.பஞ்சலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூரை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி, காங்கயத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

திருப்பூரை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி, காங்கயத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு பிஏபி பாசனச் சபைத் தலைவர் கே.குப்புசாமி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் பொறுப்பாளர்கள் பி.தங்கவேல், பி.நல்லதம்பி, பி.வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

"திருப்பூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். வறட்சியால் தீவனத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, கால்நடைகளை விற்பனை செய்யும் நிலையில் விவசாயிகள் உள்ளனர். தண்ணீரின்றி பயிர்கள் கருகிவிட்டன. விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அளிக்க வேண்டும். வேலையில்லா விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட வேண்டும்' உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

### வாழைத்தார் விலைக்குறைவால் பாதியில் நின்ற ஏலம்

அவிநாசியில் வாழைத்தார்களுக்கு குறைந்த விலை கிடைத்ததால், அதிருப்தி அடைந்த விவசாயிகள் ஏலத்தை பாதியில் நிறுத்தினர்.

அவிநாசி கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்தில் தைப் பொங்கல் விடுமுறைக்குப் பிறகு திங்கள்கிழமை வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் வியாபாரிகள் குறைந்த விலைக்கு ஏலம் கேட்டதால், ஏலத்தை பாதியில் விவசாயிகள் நிறுத்தினர்.

இதுகுறித்து விவசாயிகள் சார்பில் பாரதிய கிஷான் சங்க மாவட்டத் தலைவர் வேலுசாமி கூறியது: ஏலத்தில் குறைந்த எண்ணிக்கையிலான வியாபாரிகள்தான் பங்கேற்றனர்.

நல்ல தரத்துடன் இருக்கும் வாழைத்தார்களை குறைந்தவிலைக்கே வியாபாரிகள் ஏலம் கோரினர். இது விவசாயிகளுக்கு மோதுமானதாக இல்லை.

கடந்த முறை வாழைத்தார் கிலோவுக்கு ரூ.40 வரை ஏலம்போனது. அதேபோல சேவூரில் தனியார் மையத்தில் வெள்ளிக்கிழமை நடந்த ஏலத்தில் ரூ.35 வரை ஏலம் எடுத்துள்ளனர். ஆனால்,வியாபாரிகள் வாழைத்தார்களுக்கு போதுமான நிலையைக் கொடுக்க முன்வரவில்லை என்றார்.

அவிநாசி கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்க மேலாளர் சண்முகம் வியாபாரிகளிடம் பேச்சு நடத்தினர். இந்தப் பிரச்னை குறித்து வியாபாரிகள் கூறியது: கடந்த முறை சபரி மலை சீசன் இருந்ததால், தேவை அதிக அளவில் இருந்தது. அதனால் அதிகமாக விலை கொடுக்கப்பட்டது. தற்போது சீசன் முடிவுற்றதால், கூடுதல் விலை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்றனர்.

இறுதியாக இரு தரப்பினர் பேச்சு நடத்தி, ஏலம் மீண்டும் மாலை 4.30 மணிக்கு துவங்கியது. இதில் வாழைத்தார் கிலோவுக்கு அதிகபட்ச விலையாக ரூ.30 கொடுக்கப்பட்டது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம்

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 41.58 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 447 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.72 டி.எம்.சி.

பயிர் இழப்பீடு கோரி கர்நாடகத்துக்கு எதிராக வழக்கு: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

நீர் இல்லாமல் சம்பா பயிர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை கர்நாடக மாநில அரசு ஈடுசெய்யும் வகையில் ஒரு சிவில் வழக்கினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, டெல்டா பகுதிகளை ஆய்வு செய்த தமிழக அரசின் உயர் நிலைக் குழு விரைவில் தனது அறிக்கையை அரசுக்கு அளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

கர்நாடகம் உரிய முறையில் நீரினை தனது நான்கு நீர்த்தேக்கங்களில் இருந்து தமிழகத்துக்கு நடப்பாண்டில் விடுவிக்கவில்லை. இதனால், மாநிலத்தில் குறுவை மற்றும் சம்பா சாகுபடி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியது. இதைத் தவிர புனல் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா விவசாயிகள் பயிரிட்டிருந்த சம்பா பயிரை காப்பாற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும், மானியங்களையும் அளிக்க ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது, காவிரி பாசனப் பகுதிகளை

பார்வையிட்டு விவசாயிகளுக்கு மேலும் அளிக்க வேண்டிய நிவாரணம் குறித்து அறிக்கை அனுப்பும் வகையில், நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்க உத்தரவிட்டிருந்தேன்.

இந்தக் குழு, காவிரி பாசனப் பகுதிகளில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டது.

இந்தக் குழு விரைவில் அரசுக்கு அளிக்க உள்ள அறிக்கையின் அடிப்படையில், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வழக்கு தாக்கல்: பிடிவாதப் போக்கு காரணமாக நடை

முறையில் உள்ள காவிரி நடுவர் மன்ற உத்தரவுகளின்படி, தமிழகத்துக்குரிய நீரினை கர்நாடகம் விடுவிக்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டும், கர்நாடக அரசு உரிய நீரை தமிழகத்துக்கு வழங்கவில்லை என காவிரி கண்காணிப்புக் குழு பதிவு செய்துள்ளதன் அடிப்படையிலும், தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை கர்நாடகம் ஈடு செய்யும் வகையில் ஒரு சிவில் வழக்கை உச்ச நீதின்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளேன்.

நடப்பு பாசன ஆண்டில் கர்நாடக அரசு இப்போது நடைமுறையில் உள்ள காவிரி நடுவர் மன்ற இடைக்கால உத்தரவுப்படி தமிழகத்துக்கு நீரை அளிக்க முன்வராத நிலையில், இந்தப் பிரச்னை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது.

எனது தொடர் வலியுறுத்தல் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தலையீடு காரணமாக, கர்நாடக அரசு கட்டாயப்படுத்தப்பட்டு நீரை விடுவித்து வந்தது. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் கடந்த நவம்பர் 26-ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, இரு மாநில விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இரு மாநில முதல்வர்களும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்தது.

இதையடுத்து, பெங்களூர் சென்று கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது, தமிழகத்துக்கு விடுவிக்க வேண்டிய நீரில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையான 53.4 டி.எம்.சி., நீரை டிசம்பருக்குள் விடுவிக்க வேண்டும் எனவும், உடனடித் தேவையாக அடுத்த 15 நாட்களுக்குள் 30 டி.எம்.சி., நீரை விடுவிக்க வேண்டும் எனவும் கர்நாடக முதல்வரை வலியுறுத்தினேன். ஆனால், கர்நாடக அரசு ஒரு சொட்டு நீரைக் கூட விடுவிக்க இயலாது எனத் தெரிவித்தது.

இந்த நிலையில், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட உச்ச நீதிமன்றத்தை நாடி வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. காவிரி நதிநீர் பிரச்னையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்கும், காவிரி டெல்டா பகுதியில் வேளாண் தொழில் மேற்கொள்ள ஏதுவாக காவிரி நதிநீரை கர்நாடகத்திடம் இருந்து பெறுவதற்கும் தமிழக அரசு ஆக்கப்பூர்வமான வகையிலும், முனைப்புடனும் தொடர்ந்து போராடி வருகிறது.

காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள பயிர்களை ஓரளவேனும் காப்பாற்றும் வகையில், கர்நாடக அரசு உடனடியாக 12 டி.எம்.சி. நீரை விடுவிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு கடந்த 17-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. அதனை உடனடியாக விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டுமென நீதிமன்றத்தில் கடந்த 18-ஆம் தேதி வலியுறுத்தப்பட்டது.

உச்ச நீதிமன்றம் இந்த மனுவை, வரும் 28-ஆம் தேதி விசாரிக்க உள்ளதாக முதல்வர் ஜெயலலிதா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் தற்கொலை: சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரி வழக்கு
காவிரி டெல்டா மாவட்டங்களில் தண்ணீரின்றி பயிர்கள் கருகியதால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு குறித்து இம்மாதம் 30-ஆம் தேதிக்குள் தமிழக அரசு பதிலளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னையைச் சேர்ந்த வழக்குரைஞர் ஜி. ராஜேந்திரன் பொது நல மனு தாக்கல் செய்துள்ளார். காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினத்தில் நெல் சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகியதால் 5 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

விவசாயிகள் இதுபோல் தற்கொலை செய்து கொள்வதை தடுத்திட அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என்று அந்த மனுவில் ராஜேந்திரன் கோரியிருந்தார்.

இந்த மனு தொடர்பாக தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது. பயிர் சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காததால் டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர் என்று கூறுவது உண்மையல்ல. உடல் நலப் பிரச்னைகள், குடும்ப பிரச்னைகள் மற்றும் விபத்துகளின் காரணமாகவே அத்தகைய மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

ஆகவே, விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக மனுதாரர் கூறுவதில் உண்மையில்லை. டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன்களைக் காப்பதற்கான ஏராளமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்று பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கு தலைமை நீதிபதி (பொறுப்பு) எலிபி தர்மாராவ், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்னிலையில் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் சார்பில் ஆஜரான அரசு தலைமை வழக்குரைஞர் ஏ. நவநீதகிருஷ்ணன், டெல்டா மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக விவசாயிகள் யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்று வாதிட்டார்.

ஆனால், அரசுத் தரப்பில் உண்மைகளை மூடி மறைப்பதாக மனுதாரர் ராஜேந்திரன் தெரிவித்தார். நான் இந்த மனுவை தாக்கல் செய்த நேரத்தில் 5 விவசாயிகள் மட்டுமே தற்கொலை செய்து கொண்டிருந்தனர். இப்போது தற்கொலை செய்து கொண்டு மரணமடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்து விட்டது. நெல் சாகுபடி பொய்த்ததன் காரணமாகவே இந்த விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். இதனை நிரூபிப்பதற்கு தேவையான ஆதாரங்கள் உள்ளன. ஆகவே, இநத தற்கொலை சம்பவங்கள் தொடர்பாக உண்மை நிலையை கண்டறிவதற்காக சி.பி.ஐ. விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். இந்த கோரிக்கை தொடர்பாக நான் துணை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளேன் என்று ராஜேந்திரன் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து, சி.பி.ஐ. விசாரணைக் கோரி மனுதாரர் ராஜேந்திரன் தாக்கல் செய்துள்ள துணை மனு தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் விசாரணையை இம்மாதம் 30-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## சாத்தனூர் அணை திறப்பு

சாத்தனூர் அணையில் இருந்து பாசனத்துக்காக திங்கள்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

119 அடி உயரம் கொண்ட இந்த அணையில், 90 அடி உயரம் மட்டுமே தண்ணீர்

உள்ளது.

இந்த அணை திருக்கோவிலூர் ஆயக்கட்டு பாசனத்துக்காக திங்கள்கிழமை காலை 7 மணிக்கு திறந்து விடப்பட்டது.

விநாடிக்கு 900 கன அடி வீதம் தொடர்ந்து 6 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடை வளர்ப்பு கண்காட்சி

வேலூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கால்நடை வளர்ப்புக் கண்காட்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

கண்காட்சியை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்த ஆட்சியர் பொ. சங்கர், அதில் இடம்பெற்ற கினி கோழிகள், ஜப்பான் காடைகள், உயர் ரக ஆடுகள், கால்நடை தீவனப் பயிர்களான முயல் மசால், வேலி மசால் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய விவசாயிகள் கால்நடை வளர்ப்பு மூலம் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது என்று சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் சந்திரசேகரன் கூறினார்.

## தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கக் கோரி வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் (செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை கிளை) சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டத் தலைவர் சி.பூங்காவனம் தலைமை வகித்தார். தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பெ.அரிதாசு, மாவட்ட துணைத்தலைவர் கி.பால்ராஜ் மற்றும் ராமகிருஷ்ணன், ஜி.கே.சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்துக்கு புதிய ரக பட்டுக் கூடு அறிமுகம்

மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் தமிழகத்துக்கு புதிய ரக பட்டுக் கூடுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

தொடக்கத்திலேயே இந்த ரகங்களுக்கு அதிகபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.405.80 கிடைத்திருப்பது விவசாயிகள், நூற்பாளர்கள், பட்டு வளர்ச்சித் துறையினருக்கு வியப்பை அளித்துள்ளது.

தமிழகத்தில் மஞ்சள் சந்தைக்கு ஈரோடு புகழ் பெற்றிருப்பதைப் போன்று, பட்டுக் கூடு சந்தைக்கு தருமபுரி புகழ் பெற்றுள்ளது.

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர், பாலக்கோடு பென்னாகரம், சேலம், கோவை, உடுமலைப்பேட்டை, கோபிச்செட்டிப்பாளையம், தாளவாடி, திருவண்ணாமலை, வாணியம்பாடி, திருச்சி, புதுக்கோட்டை, பழனி, சிவகங்கை என 16 இடங்களில் பட்டுக் கூடு அங்காடிகள் இருந்தாலும், பிரதானமாக இருப்பது தருமபுரி மட்டுமே.

இங்குதான் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில் வர்த்தகம் நடைபெறுகிறது. இது மட்டுமல்லாது ஆந்திரம், கர்நாடகம், தமிழகத்தைச் சேர்ந்த பட்டுக் கூடு விவசாயிகள் பலரும் தங்களது பட்டுக் கூடுகளை இந்த அங்காடிக்குக் கொண்டு வந்து விற்பதில் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர்.

பட்டுக் கூடு பரிவர்த்தனை: தருமபுரி பட்டுக் கூடு அங்காடியில் தினசரி நடைபெறும் பட்டுக் கூடு பரிவர்த்தனையில் 120 பட்டு விவசாயிகளும், 50-க்கும் மேற்பட்ட பட்டு நூற்பாளர்களும் கலந்து கொள்கின்றனர். நாள்தோறும் 3 ஆயிரம் கிலோ பட்டுக் கூடுகள் பரிமாற்றம் நடைபெறுகிறது. பட்டுக் கூடுகளை விற்பனை செய்யும் விவசாயிகளிடமிருந்து ரூ.100-க்கு 75 காசுகளும், கொள்முதல் செய்யும் நூற்பாளர்களிடமிருந்து ரூ.100-க்கு 75 காசுகளும் லெவித் தொகையாகப் பெற்று, அரசுக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

வழக்கமாக மஞ்சள் இன கலப்பினக் கூடுகள், வெண் பட்டுக் கூடுகளில் உள்ள ரகங்கள் மட்டுமே விற்பனைக்கு வரும்.

இப்போது 'க14 ஷ் இநத 2' என்ற புதிய ரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மைசூரில் உள்ள மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில், இந்தப் புதிய ரகப் பட்டு முட்டைகளை வளர்க்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, முதல் கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி ஒன்றியங்களில் 5 விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, இந்தப் புதிய ரக பட்டு முட்டைகள் வழங்கப்பட்டன.

இப்போது, முட்டைகளில் இருந்து கூடு வளர்ந்து விற்பனைக்கு வந்துள்ளது. தருமபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு 4 விவசாயிகள் இந்தப் புதிய ரகக் கூடுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில் இதர கூடுகளைவிட புதிய ரகக் கூடுக்கு கூடுதல் வரவேற்பு கிடைத்தது. அதிகபட்சமாக கிலோ ரூ.405.80-க்கு விலை போனது. இந்த விலை வெண் பட்டுக் கூடு ரகங்களுக்கு இணையாக இருந்தது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

மஞ்சள் கலப்பினக் கூடுகள் 1,400 கிலோவும், வெண் பட்டுக் கூடுகள் 165 கிலோவும், புதிய ரகக் கூடுகள் 323 கிலோவும் விற்பனைக்கு வந்திருந்தன. இதில், புதிய ரகமே அதிகபட்ச விலைக்குப் போனது.

இதுதொடர்பாக பட்டுக்கூடு உற்பத்தி செய்த பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்துக்குள்பட்ட பாறைப்பட்டி புதூரைச் சேர்ந்த விவசாயி செழியன் கூறியது:

### இதர கூடுகளை உற்பத்தி

செய்ய ஆகும் செலவைவிட புதிய ரகக் கூடுக்கு ஆகும் செலவு குறைவாக உள்ளது. மகசூலுக்கு வரும் நாள்களும் குறைவாகவே உள்ளது. இதர கூடுகள் 23 முதல் 25 நாள்கள் என்றால், புதிய ரகக் கூடுகள் 22 நாள்களுக்குள்ளேயே அறுவடைக்கு வந்துவிடுகின்றன. இப்போது, விலையும் அதிகமாகக் கிடைத்துள்ளது. இதே விலை கிடைத்தால் அனைத்து விவசாயிகளும் புதிய ரகக் கூடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பர் என்றார் அவர்.

தருமபுரி பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் ப. ஜெயக்குமார் கூறியது:

புதிய ரகத்தில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு 75 கிலோ அறுவடை கிடைக்கிறது. சர்வதேசத் தரத்துக்கு நிகராக நூல் கிடைக்கிறது. மேலும், இதர ரகங்களைவிட கூடுதல் அளவு நூல் கிடைக்கிறது. இப்போது, விலையும் அதிகமாகக் கிடைத்திருப்பதால் அனைத்து மட்டத்திலும் இந்த ரகத்துக்கு வரவேற்பு கிடைத்துள்ளது என்றார் அவர்.

தருமபுரியைச் சேர்ந்த நூற்பாளர் மணிவண்ணன் கூறுகையில், நிலையான விலை கிடைக்கும் வகையில் புதிய ரகத்தை ஏலத்துக்கு கொண்டு வந்தால் விவசாயிகளும், நூற்பாளர்களும் பலன் பெறுவர் என்றார்.

கால்நடை, கோழிப்பண்ணை தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

கால்நடை, கோழிப்பண்ணைத் தொழில் சார்ந்த சுயவேலைவாய்ப்பு பயிற்சிகள் பயில விருப்பமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் முதல்வர் கே.ஏ.துரைசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தொழில்மயமாக மாறிவரும் கால்நடை மற்றும் கோழிப்பண்ணை தொழிலில் மனிதவளத் தேவையை கருத்தில் கொண்டும், கிராமப்புற மக்களின் வருவாயை உயர்த்திடவும் பல்வேறு சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் கோழிப்பண்ணைத் தொழில் சார்ந்த பயிற்சிகளான தீவன ஆலை மேற்பார்வையாளர், கோழிப்பண்ணை மேலாளர், குஞ்சு பொரிப்பக மேற்பார்வையாளர், கோழிப்பண்ணை மேற்பார்வையாளர், கோழியின இனப்பெருக்கப் பண்ணை மேற்பார்வையாளர், கோழிகளுக்கான நோய்த் தடுப்பூசி போடுபவர் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

தவிர, விவசாயம், கால்நடை மற்றும் செல்லப் பிராணிகள் சார்ந்த பயிற்சிகளான பசுந் தீவனம் மற்றும் விதை உற்பத்தி, அறுவை சிகிச்சை மற்றும் கதிரியக்க அறை உதவியாளர், செல்லப் பிராணிகளுக்கான உடனாள், கறவை மாட்டுப் பண்ணையம், வெள்ளாடு வளர்ப்பு, முயல் வளர்ப்பு மற்றும் வெண் பன்றி வளர்ப்பு ஆகிய பயிற்சிகளும் அளிக்கப்பட உள்ளன.

எழுத படிக்கத் தெரிந்தவர்கள் முதல் பிளஸ் 2 வரை படித்தவர்கள் வரை இந்தப் பயிற்சிகளில் சேரலாம். ஒரு மாதம் முதல் ஆறு மாதங்கள் வரை கொண்ட இந்தப் பயிற்சிகளுக்கான கட்டணம் ரூ.500 முதல் ரூ.3,000 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கான மேலும் விவரங்களை ஜ்ஜ்ஜ்.ற்ஹய்ன்ஸ்ஹள்.ஹஸ்ரீ.ண்ய் என்ற கால்நடை மருத்துவ பல்கலைக்கழக இணையதளத்திலும், 04286-266491-93 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டும் பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிலை மாறும் வரை கடன் வசூல் கூடாது
வறட்சி நிலை மாறும் வரை விவசாயிகளிடம் கட்டாயக் கடன் வசூல் செய்யும் நடவடிக்கையை வங்கிகள் கைவிட வேண்டும் என்று இந்திய மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்த இயக்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல்லில் திங்கள்கிழமை நடைபெற்றது. அமைப்பின் கள அமைப்பாளர் செ.நல்லசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு கள் இயக்க அமைப்பாளர்கள் இல.கதிரேசன், சிப்பி முத்துரத்தினம், பி.கே.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கள்ளுக்கான தடையை விலக்குவது குறித்த கோரிக்கைகளை நியாயப்படுத்திடவும், தேர்தல் வாக்குறுதி அடிப்படையில் கள்ளுக்கான தடையை விலக்கிடக் கோரியும், சென்னையில் வருகிற பிப்ரவரி 28-ஆம் தேதி அசுவமேத யாகம் நடத்தப்படும். அப்போது வழியில் யாக குதிரையை

தடுத்து நிறுத்தி அரசியல் கட்சியினர் விவாதம் செய்யலாம். அதில், இந்த கோரிக்கையில் நியாயம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டால் போராட்டம் கைவிடப்படும்.

நாட்டின் சராசரி மழையளவு 1250 மீமீ. இதன் மூலம் ஆண்டுதோறும் 70 ஆயிரம் டிஎம்சி நீர்வளம் கிடைக்கிறது. இதில், 20 ஆயிரம் டிஎம்சி பயன்பாடு போக மீதம் 50 ஆயிரம் டிஎம்சி தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இது ஒருபுறம் இருக்க மறுபுறம் கடும் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு பாதிப்புகளும் ஏற்பட்டுக் கொண்டுள்ளன.

இத்தகைய பாதிப்புகளுக்கு தீர்வு காண நதிகளை இணைக்க வேண்டும். குறைந்தபட்சம் முதல் கட்டமாக தமிழக நதிகளை இணைக்க மாநில அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பருவமழை குறைந்ததால் தமிழகம் முழுவதும் கடும் வறட்சி நிலவுகிறது. குடிநீர் பஞ்சமும் ஆங்காங்கே ஏற்பட்டுள்ளது. இந்த மோசமான நிலைமை மேலும் தீவிரமடையும் எனத் தெரிகிறது. இத்தகைய நெருக்கடி நிலையில் விவசாயிகளின் டிராக்டர்களை வங்கிகள் ஜப்தி செய்கின்றன.

இத்தகைய ஈவு இரக்கமற்ற செயலை கைவிட்டு, வறட்சி மறைந்து பஞ்சம் தெளியும் வரை கடன் வசூல் இல்லாமல் இருக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, மின் வெட்டால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களுக்கும் கடன் வசூலை தள்ளிப்போட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ராமசாமி, மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.தங்கராசு, ம.கோகுல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கெங்கவல்லியில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கம் கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் சங்கத்தின் வட்டாரத்தலைவர் ராஜகோபால் தலைமை வகித்தார்.ஆர்ப்பாட்டத்தில் கடந்த 4 மாதங்களாகவே பருவ மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவுகிறது.விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் திணறுவதால், சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்,விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூபாய் 20 ஆயிரம் நட்ட ஈடாக தமிழக அரசு வழங்கிடவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறுக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.ஆர்ப்பாட்டத்தில் வட்டாரம் முழுவதும் இருந்து விவசாயிகள் சங்கப்பிரதிகள் பங்கேற்றனர்.

கெங்கவல்லியில் நாளை 23ந்தேதி முதல் பருத்தி ஏலம் துவங்குகிறது.

கெங்கவல்லியில் ஒரு வருடத்திற்கு பின்னர் மீண்டும் பருத்தி ஏலம் நாளை 23ந்தேதி புதன்கிழமை முதல் நடைபெற உள்ளது. சேலம் மாவட்டம் மஞ்சனிகேட் பகுதியில் செயல்பட்டு வரும் கெங்கவல்லி ஒழுங்குமுறை

விற்பனைக்கூடத்தின் ஊரக மையத்தில் நாளை 23ந்தேதி புதன்கிழமை நடைபெற உள்ளது. இனி பருத்தி ஏலம் ஒவ்வொரு புதன்கிழமைதோறும் நடைபெற உள்ளது.கடந்த வருடம் 2012 பிப்ரவரி மாதத்துடன் நிறைவடைந்த பருத்தி ஏலம் மீண்டும் துவங்குகிறது.இதனை கெங்கவல்லி,தலைவாசல் வட்டார விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு பலனடைய வேண்டும் என்று கெங்கவல்லி ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளர் சுப்ரமணி தெரிவித்துள்ளார்.

## கட்டளை வாய்க்காலில் நீர் திறக்கக் கோரிக்கை

கட்டளை வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடக் கோரி கரூரில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் மனு அளித்தனர்.

குளித்தலை வட்டத்தில் உள்ள முதலைப்பட்டி, மேலமேடு உள்ளிட்ட கிராம மக்கள் அளித்த மனு:

குளித்தலை வட்டத்தில் உள்ள நெய்தலூர், முதலைப்பட்டி, சேப்பளாப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் 1,500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். இப்பகுதியில் உள்ள 500-க்கும் மேற்பட்ட ஏக்கரில் நன்செய் பயிர்களான நெல், வாழை ஆகியவை பயிரிடப்பட்டுள்ளன. கட்டளை வாய்க்கால் மூலம் இந்தப் பகுதி பாசன வசதி பெறுகிறது. இப்போது கட்டளை வாய்க்காலில் தண்ணீர் வராததால் இங்கு பயிர்கள் அனைத்தும் காய்ந்து போயுள்ளன.

எனவே, இந்தப் பயிர்களைக் காப்பாற்ற மாவட்ட நிர்வாகம் உடனடியாக கட்டளை வாய்க்காலில் தண்ணீர் திறந்து விட வேண்டும்.

கரூர் மாவட்டம், நன்னியூர் அருகேயுள்ள செவ்வந்திபாளையம் மக்கள் அளித்த மனு:

நன்னியூர் அருகே காவிரியாற்றில் உள்ள மணல் குவாரிகளில் இருந்து மணல் அள்ளப்படுகிறது. இங்கிருந்து தினமும் 100-க்கும் அதிகமான லாரிகளில் அனுமதியில்லாமலும், அரசு விதிகளை மீறியும் மணல் அள்ளப்படுகிறது. இந்த செவ்வந்திபாளையம் வழியாகச் செல்வதால், இங்குள்ள குறுகிய சிறிய பாலங்கள் சேதமடைந்துவிட்டன.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லாமல் உள்ளது. எனவே, அவர்களின் நலன் கருதி காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலை 3.30 மணி முதல் 4.30 மணி வரை மணல் லாரிகளை அனுமதிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

குறைதீர் நாள் கூட்டத்தில் புதிய ரேஷன் கார்டு, முதியோர் உதவித் தொகை, பட்டா தொடர்பாக பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கும்படி ஆட்சியர் உத்தரவிட்டார்.

கூட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கரூர் வட்டத்தைச் சேர்ந்த 30 பேர், அரவக்குறிச்சி வட்டத்தைச் சேர்ந்த 28 பேர் என மொத்தம் 58 பேருக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவுகளை வழங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் தா. கிறிஸ்துராஜ், மாவட்ட பிற்பட்டோர் நலத் துறை அலுவலர் ராமசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் ஞானசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்களின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் உள்ளிட்ட 8 வட்ட தலைமையிடங்களில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கோரிக்கைகள்:

புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். தமிழகத்துக்கு மத்திய அரசு ரூ. ஆயிரம் கோடி நிவாரணம் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட நெல்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும். பருவமழை பொய்த்துப் போனதால் விவசாயம் செய்ய முடியாத விளைநிலங்களுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் வழங்க வேண்டும்.

திருமயம்:

வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க வட்டத் தலைவர் ஏ.பி. ஆறுமுகம் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டத் தலைவர் எம். செபஸ்தியான், வட்டச்செயலர் கே.ஆர். சின்னையா, மாவட்டக்குழு உறுப்பினர் மணி, உள்ளிட்டோர் பேசினர்.

ஆவுடையார்கோவில்:

வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் எஸ். காசி, அழகர், விவசாயத்தொழிலாளர்சங்க. மாவட்டப் பொருளாளர் வே. வீரையா, உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

கந்தர்வகோட்டை:

வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் பி. வீராச்சாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் ரத்தினவேல், வட்டச் செயலர்

ஏ. ராமையன், உள்ளிட்டோர் பேசினர்.

கீரனூர்:

வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு நிர்வாகி பி. மருதப்பா தலைமை வகித்தார். முன்னாள் எம்எல்ஏ எஸ். ராஜசேகரன், உள்ளிட்டோர் பேசினர்.

அறந்தாங்கி:

அண்ணாசிலையருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் எஸ். பாண்டியன், விவசாய தொழிலாளர் சங்க தாலுகா தலைவர் அ. ஜெகநாதன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகர தலைவர் அ. பாலசுப்பிரமணியன், நிர்வாகிகள் வி. லட்சுமணன், டி. செல்வராஜ், எஸ். மெய்யர், கல்லணைக் கால்வாய் பாசனதாரர் கூட்டமைப்புத் தலைவர் அ. ராமசாமி, மாவட்ட ஏரி குள பாசன ஒருங்கிணைப்பாளர் முத்துராமலிங்கன், விவசாயிகள் சங்க தாலுகா செயலர் கருப்பையாஉள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

கால்நடை மருத்துவ மண்டல ஆராய்ச்சி மையத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

புதுக்கோட்டை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் பிப். 24 -ம் தேதி பின்வரும் செயல்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கால்நடை மருத்துவ மண்டல ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் பி.என். ரிச்சர்டுஜெகதீசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சுய வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கில் பின்வரும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் விருப்பமுள்ளவர்கள் பங்கேற்கலாம். குஞ்சுப் பொரிப்பக மேற்பார்வையாளர் பணிக்கு ஒரு மாதப் பயிற்சியும், பயிற்சிக் கட்டணமாக ரூ.1000 -மும்,10 -ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வான்கோழி பண்ணை உதவியாளர் பணிக்கு ஒரு மாதப்பயிற்சியும், பயிற்சிக் கட்டணமாக ரூ.1000 -மும் 8 -ம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், தொழில் முனைவோர், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் புதுக்கோட்டை, அண்டக்குளம் சாலையில் மாவட்ட கால்நடை பண்ணைக்கு அருகில் இயங்கி வரும், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் பிப். 18-ம் தேதி மாலை 5 மணிக்குள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். அதிகபட்சம் 10 நபர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர். மேலும் விவரங்களுக்கு இம்மையத்தை நேரிலோ அல்லது 04322-271 443 என்ற தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

## தமிழக அரசின் பதிலுக்கு விவசாயிகள் வேதனை

வறட்சி காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளவில்லை என சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் அளித்திருப்பதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்டச் செயலர் சாமி. நடராஜன் கூறினார்.

டெல்டா மாவட்டங்களில் இதுவரை 14 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இவர்களில் 2 பேர் கருகிய பயிர்களைப் பார்த்தவுடன் அதிர்ச்சியில் உயிரிழந்தனர் என்றார் அவர்.

இந்தத் தற்கொலைக்கு கர்நாடக அரசும், மத்திய அரசும்தான் காரணம். இந்த உண்மையைச் சொன்னால் மத்திய அரசிடமிருந்து நிவாரணம் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்நிலையில், தமிழக அரசு இதை மறுத்திருப்பது ஏன் எனப் புரியவில்லை என்று விவசாயி ராயமுண்டான்பட்டி வெ. ஜீவகுமார் குறிப்பிட்டார்.

காரைக்காலில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

புதுச்சேரி அரசைக் கண்டித்து, காரைக்காலில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"காரைக்காலில் விளைநிலங்கள் மனைகளாக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; தண்ணீரின்றி காய்ந்து வரும் காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம், விவசாயத் தொழிலாளருக்கு தலா ரூ. 10 ஆயிரம் வழங்க வேண்டும்; விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்; நெல்லுக்கு உரிய ஊக்கத் தொகையாக ஹெக்டேருக்கு ரூ. 10 ஆயிரம் வழங்க வேண்டும்' என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் சங்கத்தினிரின் சார்பில் ஆட்சியர் அலுவலகம் அருகே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயத் தொழிலாளர் சங்க தமிழ் மாநிலக் குழு உறுப்பினர் என்.எம். கலியபெருமாள், விவசாயிகள் சங்க காரை வட்டத் தலைவர் பெ. தாண்டவசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க நிர்வாகிகள் எஸ்.எம். தமீம், அ. திவ்யநாதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காரைக்கால் வட்டச் செயலர் அ.வின்சென்ட் உள்ளிட்ட பலர் பேசினர்.

கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை'

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலைக்கு அரைவைக்காக கரும்பும் அனுப்பும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 50 வழங்கப்படும் என்றார் ஆலை உரிமையாளர் அ. சீனிவாசன்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை:

கடந்த 2009-ல் தொடங்கப்பட்ட இந்த ஆலைக்கு பெரம்பலூர், திருச்சி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 279 வருவாய் கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் அரைவைக்காக தங்கள் கரும்புகளை அனுப்பி வைக்கின்றனர்.

நாளொன்றுக்கு சராசரியாக 3,500 டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 300 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆலையிலிருந்து 23 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, 3 லட்சத்து 75 லட்சம் யூனிட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு வழங்கப்படுகிறது.

ஆலையின் 2012- 13-ம் ஆண்டுக்கான அரைவைப் பணி கடந்த டிச. 5-ல் தொடங்கியது. நிகழாண்டின் அரைவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு அரசு அறிவித்த தொகை ரூ. 2,350-ல் வண்டி வாடகை ரூ. 100 போக, மீதம் ரூ. 2,250 அரசு அறிவிப்பின்படி வழங்கப்படுகிறது.

தற்போது, பருவமழைக் குறைவின் காரணமாக விவசாயிகளின் நலன் கருதி டன் ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக 2012- 2013 அரைவைப் பருவத்திற்கு வெட்டப்படும் கரும்புக்கு கூடுதலாக ரூ. 50 வீதம் வழங்கப்படும்.

மேலும், தங்களது கரும்பை விவசாயிகள் சொந்த வெட்டு ஆள்களை வைத்து ஆலைக்கு அனுப்பும் விவசாயிக்கு டன்னுக்கு ரூ. 25 வீதம் கூடுதல் ஊக்கத்தொகை வழங்கப்படுவதுடன், கரும்புக்கான பணமும் உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்படும்.

எனவே, தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலைக்குள்பட்ட பகுதி விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் அவர்.

## மன்னார்குடி பகுதி உளுந்து விவசாயிகள் கவனத்துக்கு

மன்னார்குடி வேளாண்மை கோட்டத்துக்குள்பட்ட பகுதியில் மார்கழி, தை பட்டத்திற்கான உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மன்னார்குடி வேளாண்மை உதவி இயக்குநர் ஆ. உத்திராபதி வெளிட்ட செய்திக்குறிப்பு:

மார்கழி, தை பட்டம் உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, மன்னார்குடி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சத மானியத்திலும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கிலோ ஒன்றுக்கு ரூ. 12 மானியத்தில் உளுந்து விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏக்கருக்கு 8 கிலோ உளுந்து விதையுடன் ஒரு பாக்கெட் ரைசோபியம் அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். விதைப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக ரைசோபியம் கலக்க வேண்டும். மேலும், உளுந்து சாகுபடிக்கு தேவையான பாதுகாப்பு மருந்துகள், கருவிகள் என அனைத்தையும் 50 சத மானியத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் சம்பா பயிரில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யலாம் எனவும் கூடுதல் விவரங்களை பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களிடம் கேட்டு பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெருக்கடியில் கும்பப்பூ சாகுபடி விவசாயிகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில், மழை பொய்த்ததால், அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் கும்பப் பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நெற்பயிரைக் காப்பாற்ற போராடி வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இயல்பாக ஓராண்டில் சராசரியாக 1,443 மி.மீ. மழை பெய்ய வேண்டும். ஆனால் 2011-ல் பெய்த மொத்த மழை 1,200 மி.மீ.

2012-ல் குறைந்த அளவு மழையே பெய்துள்ளது. ஜனவரியில் 30.63 மி.மீ, பிப்ரவரி 3.09 மி.மீ, மார்ச் 10.14 மி.மீ, ஏப்ரல் 181.47 மி.மீ, மே 5.75 மி.மீ, ஜூன் 46.90 மி.மீ, ஜூலை 65.70 மி.மீ, ஆகஸ்ட் 75.82 மி.மீ, செப்டம்பர் 32.63 மி.மீ. மழை பதிவாகி இருந்தது.

அதன்பிறகு டிசம்பர் வரை மழை பெய்யவில்லை. 2012-ல் மொத்தம் 452.13 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. இதனால் மாவட்டத்தில் கன்னிப்பூ சாகுபடியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. மாவட்டத்தில் மொத்தம் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடைபெற்று இருக்க வேண்டும்.

ஆனால் மழை குறைவாலும், அணைகளில் நீர்மட்டம் குறைந்ததாலும் 5 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் மட்டுமே நெல் சாகுபடி நடைபெற்றது. இதில் கடைசி நேரத்தில் ஏற்பட்ட தண்ணீர் பற்றாக்குறையால் சுமார் 200 ஹெக்டர் பரப்பில் நெற்பயிர்கள் கருகின.

கும்பப்பூ சாகுபடி: விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யமுடியால் இருந்த விவசாயிகள், மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் அடுத்து கும்பப்பூ சாகுபடியைத் தொடங்கினர். இப்போது 6,456 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி நடைபெற்று உள்ளது. விவசாயிகள் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை.

தற்போது பேச்சிப்பாறை அணையில் 5.85 அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் 38.50 அடி தண்ணீரும் உள்ளன.

நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதையடுத்து பேச்சிப்பாறை அணை மூடப்பட்டு, பெருஞ்சாணி அணையிலிருந்து விநாடிக்கு 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீர் கடைவரம்பு பகுதிகளுக்கு வந்து சேரவில்லை என்கின்றனர் விவசாயிகள். இதற்கிடையே நாகர்கோவில் நகரின் குடிநீர்ப் பிரச்னையை சமாளிக்க அணை தண்ணீர் மின்மோட்டார்கள் மூலம் உறிஞ்சப்பட்டு வருகிறது.

விவசாயத்தை காப்பாற்ற வேண்டிய நெருக்கடியான நேரத்தில், மக்களின் குடிநீர் பிரச்னையை சமாளிக்க வேண்டிய நிலையில் மாவட்ட நிர்வாகம் உள்ளது.

இதுகுறித்து மாவட்ட தேசிய விவசாய சங்கத் தலைவர் ஏ. செல்லப்பன் கூறியதாவது: இப்போதுள்ள சூழ்நிலையில், நெற்பயிர்களை காப்பாற்ற இன்னும் ஒரு மாதம் தண்ணீர் தேவைப்படுகிறது. அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் எந்தப் பகுதிகளுக்கு செல்கிறது என்பதை பொதுப்பணித்துறையினர் முறைப்படுத்துவதில்லை.

அதற்கு தேவையான ஊழியர்களும் இல்லை. நாகர்கோவில் நகரின் குடிநீருக்கு அணை தண்ணீர் உறிஞ்சப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் விவசாயத்துக்கு போதிய அளவு தண்ணீர் திறந்து விடப்படுவதில்லை.

இதற்கு முன் குடிநீருக்கு அணை திறக்கப்படும் முன் விவசாயிகளிடம் அனுமதி பெறப்பட்டது. இப்போது எந்த அறிவிப்பும் இல்லாமல் அணை தண்ணீர் குடிநீருக்கு பயன்படுத்தப்படுவது விவசாயிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாகர்கோவில் நகரின் குடிநீர் பிரச்னையை தீர்க்க அணை தண்ணீர் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டால், மாவட்டத்தில் விவசாயம் கேள்விகுறியாகும் அபாயம் ஏற்படும் என்றார்.

கோவில்பட்டியில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்
தமிழ்நாட்டை வறட்சி மாநிலமாக அறிவிக்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கோவில்பட்டியில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டை வறட்சி மாநிலமாக அறிவித்து, வறட்சி நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும். முற்றிலும் கருகிய விவசாயத்துக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வழங்க வேண்டும். மானாவாரி விவசாயத்துக்கு ஏக்கருக்கு ரூ.10ஆயிரம் வழங்க வேண்டும்.

விவசாயிகள், தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். பயிர்க் கடன்களை ரத்து செய்ய வேண்டும். இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான ஆணையை உடனே வெளியிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோவில்பட்டி அரசு அலுவலக வளாகம் அருகே கோவில்பட்டி ஒன்றியக் குழு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றியத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். ஒன்றியச் செயலர் ராமசுப்பு, துணைத் தலைவர்கள் முத்துகாந்தாரி, அய்யலுசாமி, ஒன்றிய துணைச் செயலர்கள் முத்துமாரியப்பன், மணி ஆகியோர் பேசினர்.

ஓட்டப்பிடாரம்:ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கக் கோரி திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலர் முரளிகஸ்தூரி தலைமை வகித்தார். மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ராகவன், மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலர் ஆறுமுகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நெல் மகசூலில் சாதனை படைத்த பெண்
திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் பகுதியில் நெல் மகசூலில் சாதனை படைத்ததற்காக குடியரசுத் தலைவரிடமிருந்து பரிசு பெற்ற பெண் விவசாயி தி. அமலராணிக்கு ஆட்சியர் சி. சமயமூர்த்தி பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

திருநெல்வேலியில் ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் நிகழ்ச்சியின்போது அவருக்கு இந்தப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

உணவு உற்பத்தியில் சாதனை படைக்கும் ஆண் மற்றும் பெண் விவசாயிக்கு மாநில அளவில் ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்று ஆகியவை 2011-12 முதல் வழங்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சகம் அறிவித்திருந்தது. அதன்படி கிருஷிகர்மான் விருது வழங்கும் விழா கடந்த 15ஆம் தேதி புதுதில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்றது. இந்த விழாவில் வாசுதேவநல்லூரைச் சேர்ந்த விவசாயி தி. அமலராணியின் சாதனையைப் பாராட்டி குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும்

வழங்கி கெப்ரவித்தார். பரிசு பெற்று திருநெல்வேலிக்கு திரும்பிய அவர் திருநெல்வேலியில் ஆட்சியரை திங்கள்கிழமை சந்தித்தார்.

அப்போது அவருக்கு பொன்னாடை அணிவித்து ஆட்சியர் பாராட்டு தெரிவித்தார். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேஸ்வரி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் கி. சவுந்தரராஜன், செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் அ. மதிமாறன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

மத்திய அரசின் விருதுபெற்ற அமலராணி இளங்கலை ஆங்கிலம் படித்த பட்டதாரி. விவசாயத்தில் ஆர்வம்கொண்டு செயல்படுகிறார். சிவகிரி வட்டம் ராமநாதபுரம் பகுதியில் நெல் விவசாயத்தில் ஈடுபடுகிறார். கடந்த 2011-12ஆம் ஆண்டு பிசான பருவத்தில் ஹெக்டேருக்கு 18,143 கிலோ நெல் உற்பத்தி செய்து மகசூலில் சாதனை படைத்ததற்காக இவர் விருதுக்குரியவராகத் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

தினமலர்

## 20 ஆயிரம் ஏக்கர் பாசன வசதிக்கு புதிய ஏரி

திருத்துறைப்பூண்டி: ""உபரி நீரை சேகரிக்கும் வகையில், விரைவில் அரசு நிதியில் அமைக்கப்படும் புதிய ஏரியால், ஆறு கிராமங்களைச் சேர்ந்த, 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இத்திட்டத்தில் மேலும் ஏரிகளை அமைப்பதற்கான ஆய்வு நடந்து வருகிறது,'' என திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ., உலகநாதன் கூறினார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது:
திருவாரூர் மாவட்டத்தில் மழை நீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்த தமிழக முதல்வர் சிறப்பு நிதியை, கலெக்டர் நடராஜன் பெற்றுள்ளார். திருவாரூர் மாவட்டத்தில் விவசாய பாசனத்துக்கு உதவும் வகையில், மிகப்பெரிய ஏரிகள் ஏதுமில்லை. இதுகுறித்து அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி, திருத்துறைப்பூண்டி அடுத்துள்ள எழிலூர் சால்வனாறு பாலத்திலிருந்து, 7.4 கி.மீ.,தூரத்துக்கு, 242 ஏக்கர் பரப்பில் புதிய ஏரி வெட்ட தமிழக அரசு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக, 17 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, வேளாண்மை பொறியியல்துறை சார்பில் திட்ட மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது.
இதன்படி ஏரி அமைத்தால், 39 லட்சத்து, 21 ஆயிரம் கன மீட்டர் உபரி நீரை ஏரியில் சேகரிக்க முடியும். பாசனத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது, எழிலூர், வங்கநகர், மருதவனம், நுணாக்காடு, நெடும்பலம், ஒவரூர் உள்பட கிராமங்கள் மற்றும் சுற்றுவட்டாரங்களிலுள்ள, 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியை பெறும். நாற்பதுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் குடிநீர்

தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். முதற்கட்டமாக, 242 ஏக்கரில் மிகப்பெரிய ஏரி, எழிலூர் கிராமத்தையொட்டி அமைக்கப்படவுள்ளது. இதைத்தொடர்ந்து படிப்படியாக பாசன வசதிக்கு ஏரிகள் எங்கெங்கு அமைய வேண்டுமோ?, அங்கெல்லாம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் பற்றாக்குறையை போக்க, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் ஆறு, குளங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், விவசாய பாசனத்தை குறைவின்றி மேற்கொள்ளும் வகையில், மேலும் பண்ணை குட்டைகளை விவசாயிகளே அமைத்துக்கொள்ள சிறப்பு நிதியை, தமிழக அரசு ஒதுக்கித்தர வேண்டும் என, முதல்வர் ஜெ.,வை சந்தித்து நேரில் வலியுறுத்தவுள்ளேன். இவ்வாறு, அவர் கூறினார்.

## தேனி விவசாயிகளை தேடி வரும் வெளி மாவட்ட விவசாயிகள்

தேனி: திசு வாழை சாகுபடியில், தேனி மாவட்டம் முதலிடத்தில் உள்ளதால், அதன் தொழில்நுட்பங்கள் பற்றி தெரிந்து கொள்ள ,வெளி மாவட்ட விவசாயிகள், தேனிக்கு வரத்தொடங்கி உள்ளனர். மாவட்டத்தில் வாழை சாகுபடி பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது. வரும் மார்ச்சு இறுதிக்குள் 10 ஆயிரம் எக்டேர் பரப்பில் வாழை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.தேனி மாவட்டத்தில் சாகுபடியாகும் வாழையில் அதிக விளைச்சல் கிடைப்பது மட்டுமின்றி, ஏற்றுமதி தரம் கிடைக்கிறது. சின்னமனூர் பகுதியில், வாழையை பதப்படத்தி, ஏற்றுமதி செய்வதற்கு தனி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், தேனி மாவட்டத்தில் வாழை சாகுபடியில் பின்பற்றப்படும் தொழில் நுட்பங்களை பற்றி தெரிந்து கொள்ள வெளி மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் வருகின்றனர். வாழை திசு உற்பத்தி கூடத்தில், திசு வாழைகள் குறித்த அனைத்து தொழில்நுட்ப முறைகளையும், குளிரூட்டுதல், ஏற்றுமதி ரகத்திற்கான வழிமுறைகளையும் தெரிந்து கொள்கின்றனர். தோட்டங்களுக்கும் சென்று விவசாய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்கின்றனர்.

## நவீன முறை மலர் சாகுபடியில் லாபம் அதிகரிப்பு

செய்யூர்:"நவீன முறையில் மலர் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் லாபம் பார்க்கலாம்,' என, பெரும்பாக்கத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியுள்ளார். மாற்று பயிர்செய்யூர் தாலுகாவில் உள்ள சித்தாமூர், லத்தூர் ஒன்றியம் அதிக விவசாய நிலங்களை கொண்ட பகுதியாகும். இங்கு, நல்ல நீர் வளம் உள்ளதால் இரண்டு போகம்

நெல்பயிரிடப்படுகிறது. தற்போது, போதிய மழை இல்லாததால், விவசாயிகள் நெல் பயிரை விடுத்து அதிக லாபம் தரும் மாற்று பயிர்களான காய்கறி, தர்பூசணி மற்றும் மலர் சாகுபடியில் ஈடுபட்டு உள்ளனர்.லத்தூர் ஒன்றியத்திலுள்ள பெரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஏழுமலை. இவர் ஆக்கினாம்பட்டு கிராமத்தில், குத்தகைக்கு பயிர் செய்து வருகிறார். நெல், லாபம் தரும் சாமந்தி பூ பயிர் செய்துள்ளார்.இதுகுறித்து அவர் கூறியதாவது:குழி தட்டு முறையில் நாற்று விடுவதால், செடிகள் நன்றாக வளர்கின்றன.

20 நாட்களுக்கு பிறகு நாற்றுகளை பிடுங்கி நட வேண்டும். ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும், 5 அடி இடைவெளியும், ஒரு செடிக்கும், மற்றொரு செடிக்கும் 2 அடியும் இடைவெளியும் விட்டு நட வேண்டும். களைகள் தாக்காமல் இருக்க, நவீன முறையில், பாலித்தீன் கவர்( மல்சிங் சீட்) கொண்டு, நடப்பட்ட நாற்றுக்களை மூட வேண்டும். சொட்டு நீர் பாசன முறையில், ஒரு நாள் விட்டு ஒரு நாள், நீர் பாய்ச்ச வேண்டும். நாற்பதாம் நாள் முதல் செடிகள் பூக்க துவங்கும். ஒரு வாரத்தில் இரண்டு முறை பூ பறிக்க வேண்டும். வாரத்தில், 500 முதல் 600 கிலோ வரை கிடைக்கும். சராசரியாக, மாதத்திற்கு 2,500 கிலோ கிடைக்கும். இதன் மூலம், 4 மாதத்தில், ஒரு ஏக்கருக்கு, செலவுகள் எல்லாம் போக ஒரு லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.மானியம் அதிகரிப்புஇதுகுறித்து லத்தூர் ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குனர் மிஸ்ரா கூறுகையில்,"தற்போது காய்கறி, மற்றும் மலர் சாகுபடி செய்ய சிறு,குறு, விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு மட்டும் சொட்டு நீர் பாசனம் அமைக்க, இந்த ஆண்டு முதல், 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. காய்கறி, மற்றும் மலர் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்,' என்றார். மேலும் தகவல்களுக்கு, தோட்டக்கலை உதவி இயக்குனரை, 94442 91579 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.நேரடி கொள்முதல் தேவை சித்தாமூர், லத்தூர் ஒன்றியங்களில், சாமந்தி மட்டுமல்லாமல் மல்லி, கனகாம்பரம், போன்ற பூ வகைகளும் பயிரிடப்படுகின்றன. இவற்றை, தோட்டக்கலைத்துறை நேரடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், களைகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும், "மல்சிங் சீட்' வாங்க மானியம் அளிக்க வேண்டும் எனவும், மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கோரியுள்ளனர்.

## சொட்டு நீர் பாசன திட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ.65 கோடி

காஞ்சிபுரம்:விவசாய நிலங்களில் சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்தும் விவசாயிகளுக்கு, மானியம் வழங்குவதற்காக, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, 65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக

மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் அறிவித்து உள்ளார்.மானியம் பெற, அனைத்து விவசாயிகளும் விண்ணப்பிக்கலாம் என, கடந்த 18ம் தேதி நடந்த விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.கடந்த 2008ல் இருந்து, சொட்டுநீர் பாசனத்திற்கு, தோட்டக்கலை துறை மூலம் மானியம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மூலமாகவும் மானியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, காய்கறி, மலர் சாகுபடிக்கு, 50 சதவீதம் மட்டுமே மானியமாக கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு முதல், அனைத்து பயிர்களுக்கும், 100 சதவீத மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

"அனைவருக்கும் உண்டு'இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் கூறியதாவது:சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்த, சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 100 சதவீதமும்; பெரிய விவசாயிகளுக்கு, 75 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்த முன்வரும், அனைத்து விவசாயிகளுக்கும் மானியம் வழங்க, மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது.சொட்டு நீர் பாசன வசதியை, மத்திய அரசு அனுமதி பெற்ற நிறுவனங்கள் ஏற்படுத்தி தரும். சொட்டு நீர் பாசனத்திற்குரிய சாதனங்களை, நிலத்திற்கு கொண்டு வர ஏற்படும் போக்குவரத்து செலவு, நிலத்தில் குழி வெட்டுவதற்காகும் செலவு, ஆகியவற்றை மட்டும் விவசாயிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு விவசாயிக்கு, அதிகபட்சமாக 43,816 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மற்றும் உத்திரமேரூரில், பிப்ரவரி மாதம் முதல் தேதி, திருப்போரூர், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், மதுராந்தகம் வட்டத்தில், பிப்ரவரி மாதம் 2ம் தேதி, சொட்டு நீர் பாசன மேளா நடைபெறும். இடம் பின்னர் அறிவிக்கப்படும். இம்மேளாவில், ஸ்ரீபெரும்புதூர், தாம்பரம், செய்யூர், வட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் கலந்து கொள்ளலாம் என, அறிவிக்கப்பட்டுள்ளது.தயக்கம் ஏன்?சொட்டு நீர் பாசன திட்டம் மிகவும் பயனுள்ளது என்பதை அறிந்துள்ள விவசாயிகள், அதை செயல்படுத்துவதில் தொடர்ந்து தயக்கம் காட்டுவதற்கு, விழிப்புணர்வு குறைவு என்பது மட்டுமல்லாமல், வேறு சில காரணங்களும் உள்ளன. திட்டத்தை செயல்படுத்த விரும்பும் விவசாயிகள், வேளாண் அல்லது தோட்டக்கலை அதிகாரிகளை தொடர்பு கொள்ளும்போது, தேவையில்லாமல் அலைக்கழிக்கப் படுகின்றனர் சொட்டு நீர் பாசனத்திற்கான கருவிகளை கொண்டு வரும் தனியார் நிறுவனங்கள், அவற்றை சரிவர பொருத்தாமல், சென்றுவிடுகின்றன. அதிகாரிகளிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொள்ளும் தனியார் நிறுவனங்கள், அடுத்த கட்ட

பராமரிப்புக்கு வருவதில்லை இவை, திட்டத்தை கடந்த ஆண்டு செயல்படுத்திய விவசாயிகளின் புகார்களாக உள்ளன. இதனால், மற்ற விவசாயிகள் திட்டத்தை செயல்படுத்த தயங்குகின்றன. இந்த குறைகளை மாவட்ட நிர்வாகம் களைந்தால், காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் சொட்டு நீர் பாசன திட்டம் மூலம், முழு பயனையும் பெற முடியும். சொட்டு நீர் பாசன நன்மைகள் குறைந்த நீரில் அதிக பரப்பு பயிர் செய்யலாம். 75 சதவீதம் நீரை சேமிக்கலாம். சாகுபடி செலவு குறைந்து, வருமானம் அதிகமாகும். பயிர் திடமாக, ஆரோக்கியமாக வளர்வதோடு, வேகமாக முதிர்ச்சி அடையும். தண்ணீரில் கரையும் உரங்களை, நேரடியாக பயிரின் வேர்பகுதிக்கு வழங்க முடியும். களை எடுக்க வேண்டியதில்லை.ஆட்கள் செலவு குறைவு.அதிக விளைச்சல்.

## நிழற்பந்தல் அமைத்து கரும்பு நாற்று உற்பத்தி புதிய யுக்தி

ஆர்.கே.பேட்டை:திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகள் நிழற்பந்தல் அமைத்து, கரும்பு நாற்று உற்பத்தி செய்யும் புதிய முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். நெல், கேழ்வரகு போன்றவை நாற்று இடப்பட்டு, குறிப்பிட்ட நாட்களுக்கு பின் நடவு செய்யப்படும். கரும்பு, துண்டுகளாக வெட்டி நடவு செய்யப்படும். இதன் கணுக்களில் உள்ள மொட்டுகள், புதிய செடிகளாக வளரும். தற்போது, நெல் ரகங்களைப் போன்றே, கரும்பையும் நாற்றுகளாக உற்பத்தி செய்து விற்பனைக்கு அனுப்புகின்றனர்.இந்த தொழில்நுட்பம் மூலம் விதை கரும்பு தேவையும், செலவும் குறைவதாக கூறப்படுகிறது. ஆர்.கே.பேட்டை அடுத்த கொண்டாபுரம் கிராமத்தில், நிழற்பந்தல் அமைத்து, கரும்பு நாற்றுகளை உற்பத்தி செய்து வருகின்றனர். கரும்பு நாற்று உற்பத்திக்காக நிழற்பந்தல் அமைக்கப்படுகிறது. அந்த பந்தலில், பிளாஸ்டிக் பைகளில் தென்னை நார் கழிவில், கரும்பு நாற்று வளர்க்கப்படுகிறது.முளைப்பு திறன் கண்டறிதல்கரும்பின் மொட்டு பகுதி மட்டும் இதில் விதைக்கப்படும்.

சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு, கரும்பு நடவு செய்ய, 4 டன் விதை கரும்பு தேவை. ஆனால் இந்த முறையில், 2 டன் விதை கரும்பு போது மானது. விதை கரும்பு ஒரு டன், 2,500 ரூபாய்.ஒரு டன் விதை கரும்பில், 10 ஆயிரம் நாற்றுகள் உற்பத்தி செய்ய முடியும். இதற்காக, ஏழு முதல், எட்டு மாதம் வளர்ந்த கரும்பு பயன்படுத்தப்படுகிறது.

அதிக நாட்கள் வளர்ந்த கரும்பு மற்றும் கரும்பின் வேர் பகுதி பயன்படாது.கரும்பின் மொட்டுகளை, சலவை மருந்து கொண்டு சுத்தம் செய்யப்பட்டு, சிறிதளவு (தீப்பெட்டி அளவு) யூரியா கலந்த நீரில் வைக்க வேண்டும். அல்லது சுண்ணாம்பு கலந்த நீரில் சுத்தம் செய்து, சாக்குப்பைக்குள் மூன்று நாட்கள் வைத்திருக்க வேண்டும். இதில், விதைகளின் முளைப்பு திறன் கண்டறியப்படும். முளைக்காத விதைகள் அகற்றப்பட்டு, திறன் வாய்ந்த விதைகள் மட்டும் நாற்றுகளாக வளர்க்கப்படும். மின்சாரம், பணம் மிச்சம்குறைந்த இடத்தில் நாற்றுகள் வளர்க்கப்படுவதால், நீர் பாய்ச்சுவது, உரம் இடுவது போன்ற செலவுகள் வெகுவாக குறைகின்றன. இதனால், மின்சாரம், பணம், மனித சக்தி சேமிக்கப்படுகின்றன.மேலும், ஒரு மாத வளர்ச்சி அடைந்த நாற்றுகள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்த நாற்றுகளை நடுவதன் மூலம், ஒரே நாளில் ஒரு மாத பயிர் தயாராகி விடுகிறது.நிழற்பந்தலில் நாற்றுகள் வளர்க்கப்படுவதால், நோய் எதிர்ப்பு சக்தி உள்ள வீரிய வகை செடிகள் கிடைக்கின்றன.

பந்தல் அமைப்பது, அதற்கான கருவிகள் கிடைக்கும் இடம் குறித்து, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகிகள், விவசாயிகளுக்கு தகவல் அளிக்கின்றனர். திரூர் விதை ஆராய்ச்சி மையத்தில், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.இதுகுறித்து, விவசாயி நந்தகுமார் கூறுகையில், ""புதிய முறையில் கரும்பு விதைப்பது குறித்து, திரூர் விதை ஆராய்ச்சி மையத்தில், எங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பந்தல், நீர் பாய்ச்சும் கருவிகள் ஆகியவை ஓசூர் பகுதியில் கொள்முதல் செய்கிறோம்," என்றார்.மேலும், "" இதற்கு ஒரு லட்சம் ரூபாய் செலவு ஆகிறது. இதற்கு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மானியம் வழங்கப்படுகிறது. வளர்ந்த நாற்றுகள், 1.50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது" என்றார்

## கூடுதல் இழப்பீடு வழங்க கோரிவிவசாயிகள் கலெக்டரிடம் மனு

விழுப்புரம்: தேசிய நெடுஞ்சாலைக்கு இடம் வழங்கிய விவசாயிகள் கூடுதல் இழப்பீடு வழங்கக் கோரி கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளனர். உளுந்தூர்பேட்டை- சேலம் தேசிய நெடுஞ்சாலைக்கு, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் அரசு மூலம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இதற்காக அரசு மூலம் வழங்கப்பட்ட உதவித் தொகை, போதுமானதாக இல்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள், நேற்று விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, அதன் மூலம் பெறப்பட்ட உத்தரவுப்படி, பாதிக்கப்பட்டவர்கள் நிலம், வீடு, கிணறு போன்றவற்றின் மதிப்பீடுகள் குறித்து கோரிக்கை மனு கொடுத்தனர்.இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கோபாலகிருஷ்ணன், மேகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## 950 அடி போர்வெல் போட்டும் நீர் இல்லை: விவசாயிகள் விரக்தி

மேட்டூர்: கொளத்தூர் பகுதியில் பயிர்களை காப்பாற்ற, ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து, போர்வெல் போட்டும், தண்ணீர் இல்லாததால், நஷ்டம் காரணமாக விவசாயிகள் கடும் விரக்தியில் உள்ளனர்.

சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில் வாழை, மஞ்சள், மிளகாய் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை தவறியதால் கொளத்தூர் பகுதியில் கடும் வறட்சி நீடிக்கிறது. இதனால், விவசாயிகள் சாகுபடி செய்த மஞ்சள், மிளகாய் பயிர்கள் தண்ணீர் இன்றி கருகி வருகின்றன. சாகுபடிக்கு, பல லட்சம் ரூபாய் செலவு செய்த நிலையில், கருகும் பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் பலர் தங்கள் நிலத்தில் தண்ணீருக்காக போர்வெல் போடுகின்றனர். பெரும்பாலான இடங்களில் விவசாயிகள், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து, 900 அடிக்கும் மேல் போர்வெல் போட்டும் தண்ணீர் இல்லாததால் விரக்தியில் உள்ளனர். கொளத்தூர் அடுத்த கோயில்பாளையத்தை சேர்ந்த சிவகுமார் கூறியதாவது:

எங்கள் நிலத்தில் மஞ்சள் சாகுபடி செய்தோம். செடியில் மஞ்சள் வைக்கும் சமயத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. ஏற்கனவே, போடப்பட்ட போர்வெல் குழியிலும் தண்ணீர் இல்லை. செடிகளை காப்பாற்ற சமீபத்தில், 1.27 லட்சம் ரூபாய் செலவு செய்து, 950 அடி ஆழத்துக்கு போர்வெல் போட்டும் தண்ணீர் இல்லை.

ஏற்கனவே, பயிர்கள் கருகுவதால் நஷ்டம் ஏற்பட்டுள்ள நிலையில், அந்த பயிர்களை காப்பற்ற போட்ட போர்வெல் குழியிலும் தண்ணீர் இல்லாததால் இரட்டிப்பு இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பயிர்கள் பாதித்த விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தீவனங்கள் விளைச்சல் குறைவால் மாடுகள் விற்பனை செய்யும் நிலை

தம்மம்பட்டி: தம்மம்பட்டி பகுதிகளில், நீர்மட்டம் குறைந்து வருவதால், தீவனப்பயிர்கள் விளைச்சல் பாதித்துள்ளது. அதன் விளைவாக, விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் எருது மாடுகளை, குறைந்த விலைக்கு விற்கும் பரிதாப நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகள், மாடு, ஆடுகளுக்கு தீவனமாக, கோ-3, கோ-4 உள்ளிட்ட தீவனங்களை வளர்க்கின்றனர். கடந்த பருவமழை போதிய அளவுக்கு இல்லாததால், விவசாய கிணறுகளில், எதிர்பார்த்த அளவுக்கு நீர்மட்டம் உயரவில்லை.

நடப்பு பட்டத்தில், விவசாயிகள் அதிகளவில் சம்பா பயிர் செய்துள்ளனர். இது தவிர, மஞ்சள்,

கரும்பு, வாழைகளையும் அதிகளவில் நடவு செய்துள்ளனர். இவைகளில், நெல்லுக்கு தினமும், மற்றவைகளுக்கு, வயல்களின் ஈரம் காயாமல் நீர் பாய்ச்ச வேண்டும். போதிய அளவுக்கு நீர் பாய்ச்சவில்லை என்றால், விளைச்சலில் பாதிப்பு ஏற்படும். இதனால், விவசாயிகளின் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கும். தற்போது, கிணறுகளில் உள்ள தண்ணீரை, இவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து பாய்ச்சுகின்றனர். அதனால், கால்நடை தீவனங்களுக்கு தேவையான தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், தீவனப்பயிர்களின் விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. விளையும் தீவனங்களை, விவசாயிகளின் பணத்தேவைகளை பூர்த்தி செய்யும் பசுமாடு, ஆடுகளுக்கு உணவாக கொடுக்கின்றனர். அதனால், உழவு மற்றும், இதர விவசாய பணிகளுக்காக பயன்படும் எருது மாடுகளை, கிடைத்த விலைக்கு விற்கும் பரிதாபமான நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயி ஒருவர் கூறியதாவது: தற்போது, தீவனம் பசுமாட்டுக்குத்தான் போதுமானதாக உள்ளது. இதனால், ஆசையாக வளர்த்து வரும் எருதுமாடுகளுக்கு, போதிய தீவனம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், வேறு வழியின்றி, 25 ஆயிரத்துக்கு விற்கக்கூடிய மாட்டை, 15 ஆயிரத்துக்கு விற்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயி சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கெங்கவல்லி: சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி, விவசாயிகள் சங்கம் சார்பில், கெங்கவல்லி தாலுகா அலுவலகம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில், சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவும், விவசாயிகளுக்கு, 25 ஆயிரம் ரூபாய், விவசாய தொழிலாளர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு தொகையும், கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்கவேண்டும். என்பன உள்ளிட்ட கோரிக்கை வலியுறுத்தி, மத்திய அரசு மற்றும் மாநில அரசை கண்டித்து கோஷம் எழுப்பப்பட்டது.

## கூடங்குளம் மின்சாரத்தை தமிழகத்துக்கு வழங்க விவசாய பிரிவு கோரிக்கை

ஓசூர்: "கூடங்குளத்தில் உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும், தமிழகத்துக்கு வழங்க வேண்டும்' என, தமிழக காங்கிரஸ் விவசாய பிரிவினர் தீர்மானம் நிறைவேற்றினர். ஓசூர் ரயில்வே ஸ்டேஷன் சாலையில், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் விவசாயி பிரிவு ஆலோசனை கூட்டம் நடந்தது. மாவட்ட விவசாய பிரிவு தலைவர் சூர்யா கணேஷ் தலைமை வகித்தார். மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜான், முன்னாள் எம்.எல்.ஏ., வெங்கடரெட்டி, வட்ட தலைவர்

திம்மராயன், முனேகவுடு, பிரபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். "காவிரி நதி நீரை, உச்சநீதிமன்ற தீர்ப்புபடி, தமிழகத்திற்கு வழங்காத, கர்நாடகா அரசை கண்டிப்பது, டெல்டா மாவட்டங்களில், தற்கொலை செய்த விவசாயிகளின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு, அரசு, வேலை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரண உதவிகளை உடனுக்குடன் வழங்க வேண்டும். கூடங்குளம் அனல்மின் நிலையத்தில் விரைவாக மின் உற்பத்தியை துவங்கி, அங்கு உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும், தமிழகத்துக்கு வழங்க வேண்டும்' என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட செயலாளர் ராஜேஷ், ஐ.என்.டி.யூ.சி., நகர தலைவர் முருகன், முன்னாள் நகராட்சி கவுன்சிலர் இக்ரம் அகமது, மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் பார்வதி, மாவட்ட பொதுச் செயலாளர் பூங்கொடி உட்பட பலர் கலந்துகொண்டனர். ராஜா நன்றி கூறினார்.

## கோதுமை சாகுபடி குறித்த பயிற்சி

கிருஷ்ணகிரி: பர்கூர் அடுத்த மல்லப்பாடி கிராமத்தில், வேளாண் துறை சார்பில், ஆத்மா திட்டத்தின் கீழ் கோதுமை சாகுபடி குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பர்கூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன் தலைமை வகித்தார். முன்னனோடி விவசாயி அசோக்குமார் முன்னிலை வகித்தார். பையூர் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் தண்டபாணி, கல்பனா, வடிவேல் மற்றும் எலுமச்சங்கிரி டாக்டர் பெருமாள் அறிவியல் நிலைய தொழில் நுட்ப வல்லுனர் சேகர் ஆகியோர், பருவத்தில் கோதுமை சாகுபடி செய்தல், மண் பரிசோதனை செய்து தேவைக்கு ஏற்ப உரமிடுதல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள், உயிர் உர விதை நேர்த்தி போன்ற தொழில் நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். கோதுமை உற்பத்தி தொழில் நுட்பம் குறித்து, ஆத்மா திட்ட மேலாளர் கணேஷ்குமார் பேசினார். விதை நேர்த்தி தொழில் நுட்பம் குறித்த செயல்விளக்கத்தை தொழில் நுட்ப அலுவலர்கள் பாண்டுரங்கன், சரவணன் ஆகியோர் செய்து காட்டினர். பயிற்சியில், பர்கூர் வட்டாரத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வறட்சியால் காட்டுத்தீ அபாயம் வனத்தை பாதுகாக்க விழிப்புணர்வு

பந்தலூர்:"வனக்குற்றங்களை தடுப்பதில் பொதுமக்களுக்கும் முக்கிய பங்கு உண்டு' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.பந்தலூர் பிதர்காடு வனச்சரகம் சார்பில் சேலக்குன்னா வனப்பகுதியில் இரவு நேர வேட்டை தடுப்பு முகாம் நடந்தது. இதில் பங்கேற்ற வனச்சரகர் கணேசன் பேசுகையில்,""பிதர்காடு வனச்சரகத்திற்கு உட்பட்ட ஏலமன்னா, விலங்கூர், பாலாப்பள்ளி, அயனிபிறா, முருக்கம்பாடி, நாரங்கமூலா, சேலக்குன்னா உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேர

வேட்டை தடுப்பு முகாம் நடத்தப்படுகிறது. மரக்கடத்தல் சம்பவங்கள், காட்டுத்தீ ஏற்படுதல் உள்ளிட்ட வன குற்றங்கள் குறித்து கண்காணிக்கும் வகையிலும், மக்களின் பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையிலும், ஒவ்வொரு பழங்குடியின கிராமங்களிலும் முகாம் நடத்தப்படுகிறது. வறட்சி காலத்தில் காட்டுத்தீ ஏற்படாமல் வனத்தை பாதுகாக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்," என்றார். இதில், வனக்காப்பாளர்கள் பரமேஸ்வரன், பிரகாஷ், காளிமுத்து, பிரதீப்குமார் வேட்டை தடுப்பு காவலர்கள் கலைக்கோவில், மகேஷ் மற்றும் பழங்குடியின கிராமத்து மக்கள் பங்கேற்றனர்.

## தேயிலை ஏலம்

குன்னூர்:குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 3வது ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் மொத்தம் 16 லட்சத்து 97 ஆயிரத்து 905 லட்சம் கிலோ தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 11 லட்சத்து 59 ஆயிரத்து 807 கிலோவும், டஸ்ட் ரகம் 5 லட்சத்து 39 ஆயிரத்து 98 கிலோவும் அடங்கும்.இந்த ஏலத்தில் பாகிஸ்தான் வர்த்தகர்கள் பங்கேற்கவில்லை. ஏலத்தில் 71 சதவீத தூள் விற்பனையானது. தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் சரிவு காணப்பட்டது. சராசரியாக சாதாரண ரக கிலோ ஒன்றுக்கு 88 ரூபாய் முதல் 93 ரூபாய்வரையிலும், உயர் வகை 120 ரூபாய் முதல் 130 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் உயர் ரகம் 86 ரூபாய் முதல் 90 ரூபாய் வரையிலும், உயர் வகை 150 ரூபாய் முதல் 160 ரூபாய் வரையிலும் விலை போனது. சி.டி.சி., டஸ்ட் அதிகபட்சமாக 172 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு 234 ரூபாயும் விலை கிடைத்தது.

## வாழை சேதம்

பந்தலூர்:பந்தலூர் அருகே குந்தலாடி ஓர்கடவு பகுதியில் வாழை தோட்டத்தை காட்டுயானை சேதப்படுத்தியது.பந்தலூர் அருகே குந்தலாடி ஓர்கடவு பகுதியில் கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக ஆண் யானை ஒன்று இரவு நேரத்தில் கிராமத்தில் புகுந்து அச்சுறுத்தி வருகிறது.இந்நிலையில், ஓர்கடவு பகுதியை சேர்ந்த மொய்தீன் என்பவரின் தோட்டத்தில், 100க்கும் மேற்பட்ட நேந்திரன் வாழை மரங்களை சேதப்படுத்தியது. தகவல் அறிந்து வந்த வனத்துறையினரின் நடவடிக்கைக்கு பின், அதிகாலை 3:00 மணிக்கு யானை சென்றது.

## கொதுவை கடன் பெற விவசாயிக்கு அழைப்பு

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடந்த கூட்டுறவு அலுவலர்கள் மற்றும் விவசாய அலுவலர்களுக்கான கூட்டத்தில், தமிழ்நாட்டிலேயே அதிக

அளவில் மக்காச்சோளம் விளையும் பெரம்பலூர் மாவட்டத்தில், மக்காச்சோளத்துக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலும், விவசாயிகள் வசிக்கும் பகுதிகளிலேயே அவற்றை ஏலம் மூலம் விற்கவும், விற்பனை செய்யும் காலம் வரை, அவர்களுக்கு கொதுவை கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

கலெக்டரின் உத்தரவுப்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும், குரும்பலூர், கல்பாடி, வேப்பந்தட்டை, அரும்பாவூர், சிறுநிலா, வெண்பாவூர், தேவையூர், புதுவேட்டக்குடி, வேப்பூர், சிறுகுடல், காரை, கொளக்காநத்தம், இரூர், நெற்குணம், ஆய்க்குடி, கூத்தூர் ஆகிய, 16 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், பெரம்பலூர் கூட்டுறவு வேளாண் விற்பனை சங்கத்தினை ஒருங்கிணைப்பாக கொண்டு, ஏல விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கூட்டுறவு கடன் சங்கங்களில், பிரதி வாரம் செவ்வாய், வியாழக்கிழமைகளில் விவசாயிகள் தங்களது மக்காச்சோளம் நேரடியாக வியாபாரிகளிடம் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏல விற்பனையின்போது விவசாயிகள் தங்களது விவசாய பொருட்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை எனக்கருதினால், அவர்கள் தங்களது விவசாய பொருட்களுக்கு சம்மந்தப்பட்ட சங்கங்களிலேயே இருப்பு வைத்து, குறைந்த வட்டி விகிதத்தில் கொதுவைக்கடன் பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## விவசாயிக்கு பயிற்சி

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், மானாவாரி நிலங்களில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து, விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் இன்று நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், விவசாயிகளுக்கு அவ்வப்போது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன்தொடர்ச்சியாக மானாவாரி நிலங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வறட்சியினால் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் எளிதில் கருகிவிடுகிறது. இதை தடுக்கும் விதமாக மழைநீரை நேரடியாக மண்ணுக்குள் நிலை நிறுத்துதல், பண்ணைக் குட்டைகள், ஊரணிகள் அமைத்தல், வரத்துவாரிகளில் தடுப்பணைகள் அமைத்தல் போன்ற, நீர்வள பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் வறட்சியிலும் பயிர்களை பாதுகாக்க முடியும் என்பதால், இதுகுறித்து நீர் பாதுகாப்பு வல்லுனர்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் பயிற்சி முகாமில் பங்கேற்று,

தங்களுடைய விளை நிலங்களில் நீர்சேகரிப்பு அமைப்புகளை உருவாக்க முன்வரவேண்டும் என, வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் கவிதா தெரிவித்துள்ளார்.

## 20 ஆயிரம் ஏக்கர் பாசன வசதிக்கு புதிய ஏரி

திருத்துறைப்பூண்டி: ""உபரி நீரை சேகரிக்கும் வகையில், விரைவில் அரசு நிதியில் அமைக்கப்படும் புதிய ஏரியால், ஆறு கிராமங்களைச் சேர்ந்த, 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இத்திட்டத்தில் மேலும் ஏரிகளை அமைப்பதற்கான ஆய்வு நடந்து வருகிறது," என திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ., உலகநாதன் கூறினார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது:
திருவாரூர் மாவட்டத்தில் மழை நீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்த தமிழக முதல்வர் சிறப்பு நிதியை, கலெக்டர் நடராஜன் பெற்றுள்ளார். திருவாரூர் மாவட்டத்தில் விவசாய பாசனத்துக்கு உதவும் வகையில், மிகப்பெரிய ஏரிகள் ஏதுமில்லை. இதுகுறித்து அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி, திருத்துறைப்பூண்டி அடுத்துள்ள எழிலூர் சால்வனாறு பாலத்திலிருந்து, 7.4 கி.மீ.,தூரத்துக்கு, 242 ஏக்கர் பரப்பில் புதிய ஏரி வெட்ட தமிழக அரசு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக, 17 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, வேளாண்மை பொறியியல்துறை சார்பில் திட்ட மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது.
இதன்படி ஏரி அமைத்தால், 39 லட்சத்து, 21 ஆயிரம் கன மீட்டர் உபரி நீரை ஏரியில் சேகரிக்க முடியும். பாசனத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது, எழிலூர், வங்கநகர், மருதவனம், நுணாக்காடு, நெடும்பலம், ஓவரூர் உள்பட கிராமங்கள் மற்றும் சுற்றுவட்டாரங்களிலுள்ள, 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியை பெறும். நாற்பதுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்.
முதற்கட்டமாக, 242 ஏக்கரில் மிகப்பெரிய ஏரி, எழிலூர் கிராமத்தையொட்டி அமைக்கப்படவுள்ளது. இதைத்தொடர்ந்து படிப்படியாக பாசன வசதிக்கு ஏரிகள் எங்கெங்கு அமைய வேண்டுமோ?, அங்கெல்லாம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் பற்றாக்குறையை போக்க, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் ஆறு, குளங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
இந்நிலையில், விவசாய பாசனத்தை குறைவின்றி மேற்கொள்ளும் வகையில், மேலும் பண்ணை குட்டைகளை விவசாயிகளே அமைத்துக்கொள்ள சிறப்பு நிதியை, தமிழக அரசு ஒதுக்கித்தர வேண்டும் என, முதல்வர் ஜெ.,வை சந்தித்து நேரில் வலியுறுத்தவுள்ளேன்.
இவ்வாறு, அவர் கூறினார்.

## வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்ககோரி ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்ககோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.திண்டுக்கல் ஆர்.டி.ஓ., அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் சங்க மாநிலத்துணைத்தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் ராஜூ, ஒன்றியதலைவர் நேரு, ஒன்றிய பொரு ளாளர் சின்ராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
சாகுபடி செய்து பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்கவேண்டும். சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்கவேண்டும். விவசாய தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்கவேண்டும். போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.பழநி: தாலுகா அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு, மாநிலப்பொதுச்செயலாளர் மணி தலைமை வகித்தார். பழநி,தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாயிகள் வாடிய பருத்தி, மக்காசோளம் போன்றவற்றை கையில் ஏந்தி, பயிர்களுக்கு ஏக்கருக்கு 25ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். சாகுபடிசெய்ய முடியாத நிலங்களுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், விவசாய தொழிலாளர்கள் சங்கத்தினர் பங்கேற்றனர்.

## ஆண்டிபட்டி பகுதியில் அவரை, முருங்கை விளைச்சல் அமோகம்

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் அவரை, முருங்கை விளைச்சல் அதிகமானதால், விலையில் சரிவு ஏற்பட்டு விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். ஆண்டிபட்டி பகுதியில், இந்த ஆண்டு மழை பொய்த்துப்போனதால் விவசாயிகள் எளிதில் விளையும் ஒட்டு ரக அவரையை தேர்வு செய்தனர். இருக்கும் நீரை பயன்படுத்தி இறவை பாசன நிலங்களில் விவசாயிகள் சிலர் அவரை சாகுபடி செய்தனர். நவம்பர், டிசம்பர் மாதங்களில், அவரைக்காய்களுக்கு அதிகப்படியான விலை கிடைத்ததால் விவசாயிகள் பல ஏக்கரில், அவரை சாகுபடியை துவக்கினர்.தற்போது, ஆண்டிபட்டி பகுதியில் தினமும் 700 முதல் 1000 மூடைகள் வரை வரத்து உள்ளது. அதிகப்படியான வரத்தால் சில வாரங்களுக்கு முன் கிலோ 30 ரூபாய் வரை விலை போன அவரைக்காய், தற்போது கிலோ 8 ரூபாயாக குறைந்து விட்டது.குறைவான மழை பொழிவு, முருங்கை விளைச்சலுக்கு சாதகமாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஆண்டிபட்டி பகுதியில் திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், டி.ராஜகோபாலன்பட்டி, சில்க்வார்பட்டி உட்பட பல கிராமங்களில் முருங் கை சாகுபடி உள்ளது. தற்போதுள்ள வெயில், மற்றும் பனியால் முருங்கை விளைச்சலும் அதிகரித்து வருகிறது. கடந்த மாதம், கிலோ 100 ரூபாய் வரை விற்ற முருங்கை, 25 ரூபாயாக குறைந்துள்ளது. திம்மரசநாயக்கனூர் விவசாயி ரெங்கராஜ் கூறியதாவது:ஆண்டிபட்டி பகுதியில் முருங்கை, அவரைக்காய் வரத்து அதிகரித்துள்ளது.இங்கிருந்து மதுரை கொண்டு செல்லப்பட்டு, பின் அங்கிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது. முகூர்த்த காலங்களில்முருங்கை, அவரைக்காய்களுக்கான தேவை அதிகமாகும்போது விலை ஏற்றம்

ஏற்படும். தற்போதுள்ள சூழலில் முருங்கை, அவரை சாகுபடி செய்த விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்,என்றார்.

## திராட்சையில் "செவட்டை' நோய் தாக்குதல் குறைந்தது சீராக ஏற்றம் காணும் விலை

கம்பம்: ஆண்டுதோறும் நவ., முதல் பிப்., வரை உள்ள காலங்களில், திராட்சையில் "செவட்டை' நோய் தாக்குதல் காணப்படும். இந்த ஆண்டு இந்த நோய் தாக்குதல் குறைந்துள்ளது.திராட்சை சாகுபடியில் மகாராஷ்டிரா முதல் இடம் வகிக்கிறது. ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி செய்யப்படும் பகுதி என்ற பெருமையை கம்பம் பள்ளத்தாக்கு பெற்றுள்ளது.இருந்த போதும் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்காத நிலை, நோய் தாக்கி மகசூல் குறைவு தொடர் கதையாகிறது. பறிக்கப்படும் திராட்சை பழங்களை கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும்,அனுப்பி வருகின்றனர்.திராட்øŒக்கு, நவ., முதல் பிப்., மாதம் வரை மோசமான காலமாகும். இந்த மாதங்களில் கடும் பனி பொழிவு இருக்கும். பனி காலம், திராட்øகு எதிரியாகும். "செவட்டை' நோய் தாக்கி பழங்கள் சேதமாகும்.இந்த நோய் தாக்கும் போது, கொடியில் உள்ள பழங்கள் உடையும். பழங்கள் இயல்பான வடிவம் மாறி சிறுத்து காணப்படும். இலைகள் நுனி கருகிவிடும். இதனால் மகசூல் குறையும். விளைந்த பழங்களை விற்பனை செய்ய முடியாது. கடந்த ஆண்டு, இதே நாளில் சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கருநாக்க முத்தன்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் திராட்சையில் "செவட்டை' தாக்குதல் கடுமையாக இருந்தது.விவசாயிகள், திராட்சை பழங்களை பறித்து, வீதியில் கொட்டினர். ஆனால் இந்த ஆண்டு செவட்டை நோய் தாக்குதல் குறைவாக காணப்படுகிறது. நோய் தாக்குதல் குறைந்ததால் விவசாயிகள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.திராட்சை விவசாயிகள் சங்க பொருளாளர் இருளாண்டி கூறுகையில்,""செவட்டை தாக்குதல் காணப்பட்டால், பழங்கள் வீணாகி போகும். இந்த ஆண்டு மழை இல்லை. பனி மட்டும் உள்ளது. இருந்தாலும் பகலில் நல்ல வெயில் அடிப்பதால் பாதிப்பு இல்லை. விலையும் கிடைக்கத் துவங்கியுள்ளது'' என்றார்.

## நிவாரணம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விருதுநகர்; கருகிய நெல் பயிருக்கு, 25 ஆயிரம் ரூபாய், மானாவாரி பயிர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்க கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், விருதுநகர் தாசில்தார் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. பெருமாள் ராஜ் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொது செயலாளர் சண்முகம் பேசுகையில், ""தமிழகத்தில் வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், அனைத்து மாவட்டத்திலும் பயிரிட்ட நன்செய், புன்செய், மானாவாரி பயிர்கள் முற்றிலும் கருகி விட்டன. வறட்சி நிவாரணம் வழங்க

கோரி, மாநிலம் முழுவதும் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். தமிழக அரசால் நியமிக்கப்பட்ட குழு, டெல்டா பகுதியை மட்டும் ஆய்வு செய்துள்ளது. இது பிற மாவட்டங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். மத்திய அரசு பேரிடர் நிவாரண நிதியாக 2500 கோடியை வழங்க வேண்டும். கருகிய நெல் பயிருக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம், மானாவாரி பயிர்களுக்கு 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். பிப்., நடக்கும் சட்டமன்ற கூட்டத் தொடருக்குள் தமிழக அரசு விவசாயிகளின் பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும். இல்லையென்றால் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை தொடர் முற்றுகை போராட்டம் நடத்துவோம்," என்றார். விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஜயமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். *தாசல்தார் அலுவலகத்திற்குள் மனு கொடுக்க நின்று கொண்டிருந்த சண்முகத்திடம், அப்பாத்துரை எஸ்.ஐ., இங்கெல்லாம் நிற்க கூடாது, வெளியில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்துங்கள் என கூறினார். இதில் விவசாயிகளுக்கும் எஸ்.ஐ., க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

### விவசாய சங்கம் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை; சிவகங்கை உட்பட 7 இடங்களில் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வறட்சி மாவட்டமாக அறிவித்தல், மத்திய அரசு நிபுணர்குழுவை அனுப்பி பயிர் பாதிப்பு கணக்கெடுத்தல், இயற்கை பேரிடர் நிதியில் இருந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தி சிவகங்கையில் விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாய தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மாவட்ட செயலாளர் ஆதிமூலம் தலைமை வகித்தார். சி.பி.எம்.,மாவட்ட செயலாளர் கந்தசாமி உட்பட பலர் பங்கேற்றனர். இளையான்குடியில் தாலுகா தலைவர் ராமன் தலைமையிலும், காரைக்குடியில் தாலுகா செயலாளர் கண்ணன் தலைமையிலும், திருப்புத்தூரில் ஒன்றிய செயலாளர் மாணிக்கம் தலைமையிலும், மானாமதுரை சிப்காட்டில் ஒன்றிய செயலாளர் ஆண்டி தலைமையிலும், திருப்புவனத்தில் சி.பி.ஐ., ஒன்றிய செயலாளர் பழனிவேல் தலைமையிலும், தேவகோட்டையில் சி.பி.எம்., தாலுகா செயலாளர் செல்வராஜ் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

### கருகிய பயிர்களை காப்பாற்ற டேங்கர் லாரிகளில் தண்ணீர் பாய்ச்சல்

வள்ளியூர்:பணகுடி பகுதிகளில் தண்ணீரின்றி கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் டேங்கர் லாரிகளில் தண்ணீர் பாய்ச்சும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் குறிப்பிட்ட காலத்தில் வடகிழக்கு பருவமழை பெய்யாமல் பொய்த்ததால் பல பகுதிகளில் குளங்கள், ஆறுகள், ஏரிகள் தண்ணீரின்றி காணப்பட்டன.

இதனால் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்த விவசாயிகள் பருவம் எதும் செய்யாமல் இருந்தனர்.

பணகுடி மற்றும் ரோஸ்மியாபுரம் பகுதிகளில் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயிகள் நெல் பயிர்கள் பயிரிட்டிருந்தனர். ஆனால் போதிய மழை பெய்யும் என நம்பி பயிர்செய்த விவசாயிகள் பம்பு செட் கிணற்றில் உள்ள நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வந்ததால் மிகுந்த அவதிக்குள்ளாகினர்.

விவசாயிகள் நீண்ட கால பயிர்களான வாழை பயிரை காப்பாற்றுவதற்காக குறுகிய கால பயிரான நெல்லிற்கு தண்ணீர் பாய்ச்சுவதில் சிக்கல் ஏற்பட்டது. ஆகையால் பல ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்த நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகும் சூழ்நிலை காணப்பட்டது. பம்ப் செட் கிணறுகளில் போதிய தண்ணீர் இல்லாததால் பல ஏக்கர் பரப்பு நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகின.

ஒரு சில விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பாற்ற சில கி.மீ. தொலைவில் உள்ள வேறு பம்ப்செட் கிணற்றிலிருந்து தண்ணீரை விலைக்கு வாங்கி டேங்கர் லாரிகள் மூலம் தங்கள் வயலுக்கு பாய்ச்சி வந்தனர்.

நெற்கதிர்கள் வந்த நிலையில் எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு டேங்கர் லாரி தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் ஒரு ஏக்கருக்கு 6 டேங்கர் லாரிகள் தண்ணீர் தேவைப்படுகிறது. இதில் ஒரு டேங்கர் லாரி தண்ணீர் கொண்டுவர ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இதனால் ஒரு ஏக்கருக்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் தண்ணீருக்காக விவசாயிகள் செலவிடுகின்றனர்.

இதனால் விவசாயிகள் பணநெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது : பயிரிட்ட நெற்பயிரை காப்பாற்ற விலைக்கு தண்ணீரை வாங்கி பாய்ச்சி வருகிறோம். வீட்டு தேவைக்கு வேண்டுமென்ற நோக்கில் அதிகளவில் பணம் செலவு செய்து நெற்பயிரை காப்பாற்றுகிறோம். கருகிய பயிர்களுக்கும், கஷ்டப்பட்டு காப்பாற்றி வரும் பயிர்களுக்கும் அரசு உரிய நிவாரண தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்தனர்.

**தென்காசி வட்டாரத்தை வறட்சி பகுதியாக அறிவிக்க கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

தென்காசி:தென்காசி வட்டாரத்தை வறட்சி பகுதியாக அறிவிக்க கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தென்காசி பகுதியில் பருவ மழை பொய்த்து விட்டதால் விவசாயம் வறட்சியின் பிடியில் சிக்கி

விட்டது. விவசாயத்தை பாதுகாக்க தமிழக அரசு தென்காசி வட்டத்தை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும். மகசூல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கிட வேண்டும். ஒரு பகுதி பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடவேண்டும். விவசாய தொழிலாளர் குடும்பம் ஒன்றிற்கு வறட்சி நிவாரணமாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கிட வேண்டும். விவசாயிகள் வாங்கிய பாங்க் கடனை ரத்து செய்ய வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தென்காசி தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தென்காசி வட்டார கமிட்டி சார்பில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வட்டார செயலாளர் கண்ணன் தலைமை வகித்தார். தலைவர் வள்ளிநாயகம், மாவட்ட குழு உறுப்பினர்கள் மூக்கம்மாள், சிவனுபாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில குழு உறுப்பினர் கணபதி துவக்க உரையாற்றினார்.

கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது. சி.ஐ.டி.யு.தலைவர் பால்ராஜ், தாலுகா செயலாளர் லெனின்குமார், கவுன்சிலர்கள் வள்ளிநாயகம், ஐயப்பன் மற்றும் சந்திரசேகர், ஆறுமுகம், ரவி, மரியதாஸ், ஞானபிரகாம் உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

## திருந்திய நெல் சாகுபடி முறையில் சாதனை பெண் விவசாயிக்கு ஜனாதிபதி விருது

திருநெல்வேலி:திருந்திய நெல் சாகுபடி முறையில் சாதனை படைத்த வாசுதேவநல்லூர் பெண் விவசாயி அமலராணிக்கு, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி விருது வழங்கி பாராட்டினார். மத்திய வேளாண்மை அமைச்சகம் உணவு உற்பத்தியில் சாதனை படைக்கும் ஆண் மற்றும் பெண் விவசாயிக்கு மாநில அளவில் ஒரு லட்சம் ரொக்க பரிசு மற்றும் பாராட்டு சான்று வழங்கப்படும் என அறிவித்தது. இதன்படி கிருஷிகர்மான் விருது வழங்கும் விழா டில்லியில் ராஷ்டிரபதி பவனில் நடந்தது.

இதில் வாசுதேவநல்லூரை சேர்ந்த அமலராணி என்ற பெண் விவசாயியின் வயலில் திருந்திய நெல் சாகுபடி முறையில் எக்டேருக்கு 18 ஆயிரத்து 143 கிலோ மகசூல் கிடைத்தது. இவரது சாதனையை பாராட்டி ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒரு லட்சம் ரூபாய் ரொக்க பரிசும், பாராட்டும் சான்றும் வழங்கி கவுரவித்தார்.

பெண் விவசாயி அமலராணியை, நெல்லையில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் கலெக்டர் சமயமூர்த்தி பாராட்டி பொன்னாடை அணிவித்தார். மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக மகசூல் எடுப்பதுடன் நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதில் டி.ஆர்.ஓ உமா மகேஸ்வரி, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன், பி.ஆர்.ஓ

மதிமாறன், வேளாண் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு 5 லட்சம் ரூபாய் ரொக்க பரிசும், தங்கப் பதக்கமும் வழங்கப்படும் என தமிழக முதல்வர் அறிவித்திருந்தார். இதில் மதுரை மாவட்டத்தை சேர்ந்த விவசாயி அதிக மகசூல் எடுத்து தேர்வு பெற்றது குறிப்பிடத்தக்கது.

**வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் செங்கோட்டையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

செங்கோட்டை:நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி செங்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.
செங்கோட்டை தாலுகா குழு தமிழ்நாடு விவசாய சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் செங்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தியும், வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கிட கோரியும், வேலையின்றி தவிக்கும் விவசாய தொழிலாளர் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கிட வலியுறுத்தியும், விவசாயிகளின் பயிர் கடன்களை ரத்து செய்யக்கோரியும் மத்திய அரசு வறட்சி நிவாரணமாக மாநில அரசுக்கு ஆயிரம் கோடி ரூபாய் வழங்கிட வலியுறுத்தியும் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்கம் தாலுகா தலைவர் பரமசிவன் தலைமை வகித்தார்.
தாலுகா செயலாளர் தம்பித்துரை, தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்க செயலாளர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை வலியுறுத்தி குண்டாறு பாசன சங்க தலைவர் பெரியசாமி, லெட்சுமணன், கருப்பசாமி, முத்துசாமி உட்பட பலர் பேசினர். ஆர்ப்பாட்டத்தை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பபட்டன.

**தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உயர்மட்டக்குழு பார்வையிட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்**

எட்டயபுரம்:தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உயர்மட்டக்குழு பார்வையிட்டு முடிவுகள் எடுக்கப்படவேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் துரைமாணிக்கம் வலியுறுத்தியுள்ளார்.
எட்டயபுரம் அருகே இளம்புவனம் கிராமத்தில் நடந்த விவசாயிகள் சங்க தாலுகா பேரவை கூட்டத்திற்கு, தாலுகா உதவி செயலாளர் குருசாமி தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் ரவீந்திரன், ஆதிமூலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவில்பட்டி முன்னாள் எம்எல்ஏ ராஜேந்திரன், விவசாயிகள் சங்கம் தாலுகா தலைவர் ரங்கசாமி, செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் தெய்வக்கனி, மாநிலகுழு தலைவர் லெனின்குமார், விவசாய சங்கப்பிரதிநிதிகள் ஆனந்தன், கணேசன், ராமசுப்பு மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் துரை மாணிக்கம் வலியுறுத்தியுள்ளதாவது:

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு சென்று அந்த மாவட்டங்களின் தலைவர்களுடன் நிலைமைகளை கண்டறிந்தோம். விருதுநகர் மாவட்டத்தில் எம்.பி., லிங்கம் தலைமையில் சங்கத்தலைவர்களும் ஊர் ஊராக சென்று நிலைமைகளை கண்டறிந்து மக்களையும் சந்தித்துவந்துள்ளனர். வட மாவட்டங்களிலும் பார்வையிட்டுள்ளனர். காவிரி பாசன மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் மக்காச்சோளம், உளுந்து பாசிப்பயிறு, கம்பு, பருத்தி, மிளகாய், சூரியகாந்தி, வாழை,கரும்பு உள்ளிட்ட புன்செய் பயிர்கள் ஏக்கருக்கு குறைந்தபட்சம் ரூ.10 ஆயிரம் வரை செலவழித்து சாகுபடி செய்துள்ளனர். அவைகள் போதிய மழையின்றி கருகிப்போய்விட்டன. சில மாவட்ட உயர் அதிகாரிகள் 95 சதம் வரை விவசாயிகளுக்கு இப்பகுதிகளில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். விவசாயிகள் மிகுந்த நெருக்கடியில் சிக்கியுள்ளனர். மானாவாரி விவசாயிகள் தொடர்ந்து இவை போன்ற இழப்புகளை சந்தித்து வருகின்றனர். பயிர் காப்பீட்டு திட்டப்படி காப்பீடு செய்த விவசாயிகளுக்கு முறையாக காப்பீட்டு தொகை வழங்காத நிலை சில ஆண்டுகளாக தொடர்கின்றது. சூறைக்காற்றால் சேதமடைந்த வாழைகளுக்கு நிவாரணமும் முழுமையாக வழங்கப்படவில்லை. இவற்றையெல்லாம் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். ஆகவே காவிரி பாசன மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகைப்பட்டினம் மாவட்டங்களில் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் கொண்ட குழு பார்வையிட்டதை போல் மற்ற மாவட்டங்களையும் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்கிட வேண்டும். என மாநில அரசும், தமிழ்நாட்டை பேரிடர் பாதித்த மாநிலமாக அறிவித்து அதிக நிதியை ஒதுக்கி விவசாயத்தையும், விவசாய தொழிலாளர்களையும் பாதுகாத்திட வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துகிறோம். மத்திய அரசிடமிருந்து தேவையான நிவாரண உதவிகளை பெற்றிட தமிழ்நாடு அரசு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசை வற்புறுத்துகிறோம் என வலியுறுத்தியுள்ளார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

கோவில்பட்டி: கோவில்பட்டி அருகே வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

கோவில்பட்டி அருகே கயத்தாறு வட்டார கிராமங்களில் வேளாண்மை துறை அட்மா தொழில் நுட்ப மேலாண்மை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. இதில் அச்சன்குளம் கிராமத்தில் மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் மாரிமுத்து அறிவுறுத்தலில் நடந்த பயிற்சியில் கோவில்பட்டி கோட்ட வேளாண்மை அலுவலர் பொன்னுராஜ் வரவேற்றார். இதையடுத்து வேளாண்மை வணிகத்துறை செயல்படுத்தும் திட்டங்கள், உணவுப்பொருட்கள் பதப்படுத்தும் முறைகள், மதிப்பூட்டுதல், சந்தைப்படுத்தல், தொழில் முனைவோருக்கு மத்திய மாநில அரசு வழங்கும் மானிய திட்டங்கள்

குறித்து பேசினர். தொடர்ந்து மண்பரிசோதனை அலுவலர் மனோகரன், விளாத்திகுளம் ஸ்காட் தொண்டு நிறுவன வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தரராஜன், கோவில்பட்டி உழவர் சந்தை உதவி நிர்வாக அலுவலர் ரேவதி, கயத்தாறு வட்டார அட்மா திட்ட மேலாளர் இந்துமதி, வட்டார உதவி வேளாண்மை அலுவலர் நீலகண்டபிள்ளை ஆகியோர் தங்களது துறை சார்ந்த பயிற்சியளித்து பேசினர். பயிற்சியில் அச்சன்குளம், காமநாயக்கன்பட்டியை சேர்ந்த சுமார் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதேபோல் கயத்தாறு அருகேயுள்ள காளாம்பட்டி கிராமத்தில் நடந்த பயிற்சிக்கு பஞ்., தலைவர் சீனிவாசராகவன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் பொன்னுராஜ் வரவேற்றார். தொடர்ந்து மண்பரிசோதனை அலுவலர் மனோகரன், உழவர் சந்தை உதவி அலுவலர் ரேவதி, கயத்தாறு உதவி வேளாண்மை அலுவலர் நீலகண்டபிள்ளை ஆகியோர் துறை சார்ந்த பயிற்சியளித்தனர். பயிற்சியில் காளாம்பட்டி, நாச்சியார்பட்டி ஆகிய கிராமங்களிலிருந்து சுமார் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## தற்கொலை முடிவில் இருந்து காப்பாற்றக்கோரி காய்ந்த பயிர்களை கையில் ஏந்தி விவசாயிகள் பச்சை துண்டு பேரணி

தற்கொலை முடிவில் இருந்து காப்பாற்றக்கோரி காய்ந்த பயிர்களுடன் விவசாயிகள் பச்சை துண்டு அணிந்து பேரணியாக சென்று திருச்சி கலெக்டர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

<u>விவசாயிகள் பேரணி</u>

காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை இதுவரை அரசிதழில் வெளியிடாத மத்திய அரசை கண்டித்தும், உழவர்கள் விவசாயத்தை கைவிட்டு வேறு வேலைக்கு செல்ல அறிவுறுத்திய பிரதமரை வன்மையாக கண்டித்தும், இந்திய நதிகளை தேசியமயமாக்க கோரியும், தற்கொலைக்கு ஆளாகும் தமிழகத்தின் அனைத்து பகுதி விவசாயிகளின் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கி கடன்கள், தனியார் வங்கி கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும், தமிழக ஆற்று மணலை வேறு மாநிலங்களுக்கு அரசே விற்பனை செய்வதை தடை செய்யவேண்டும் உள்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று திருச்சியில் பேரணி நடைபெற்றது.

<u>காய்ந்த பயிர்களுடன்...</u>

திருச்சி வெஸ்ட்ரி பள்ளி அருகில் இருந்து புறப்பட்ட இந்த பேரணிக்கு சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.ஏ. சின்னச்சாமி தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் வேலுமணி, பொதுச்செயலாளர் சுந்தரம், மாநில செயலாளர் ராஜா சிதம்பரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருச்சி மாவட்ட தலைவர் சின்னத்துரை, கரூர் மாவட்ட தலைவர் முருகேசன், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் நீலகண்டன், அரியலூர் மாவட்ட தலைவர் அன்பழகன், திருச்சி மாவட்ட செயலாளர் கணேசன் உள்பட 4 மாவட்டங்களில் இருந்தும் வந்திருந்த ஏராளமான விவசாயிகள் பச்சை துண்டு அணிந்து கலந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்ட விவசாயிகள் காய்ந்த நிலையில் இருந்த நெற்பயிர்களை கையில் தூக்கி காண்பித்தபடி வந்தனர்.

<u>ஆர்ப்பாட்டம்</u>

பேரணி கலெக்டர் அலுவலகத்தை அடைந்ததும் அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில தலைவர் சின்னச்சாமி உள்பட முக்கிய நிர்வாகிகள் பேசினார்கள். “தமிழகத்தில் நிலவும் மின்வெட்டை போக்க தமிழகத்தில் உற்பத்தியாகும் அனைத்து மின்சாரத்தையும் தமிழகத்திற்கே வழங்கவேண்டும், 58 வயதை கடந்த அனைத்து விவசாயிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் 5 ஆயிரம் ரூபாயும், குடியிருக்க வீடு கட்டி கொடுக்கவேண்டும், தமிழக முதல் –அமைச்சர் காலம் தாழ்த்தாமல் அனைத்து விவசாய சங்க தலைவர்கள், அனைத்து கட்சி தலைவர்களை ஒன்று திரட்டி காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட பாராளுமன்றம் முன் முற்றுகை போராட்டம் நடத்தவேண்டும்“ என்பது உள்பட பல தீர்மானங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## கோவை தேயிலை வர்த்தக மையத்தில் ரூ.2 கோடியே 85 லட்சத்துக்கு தேயிலை தூள் ஏலம் விற்பனை சராசரி 18 சதவீதம் குறைவு

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.4 கோடியே 40 லட்சத்துக்கு தேயிலை தூள் ஏலம் போனது. விற்பனை சராசரி 18 சதவீதம் குறைந்து உள்ளது.

<u>தேயிலை தூள் ஏலம்</u>

கோவை–மேட்டுப்பாளையம் ரோடு ஜி.என்.மில்ஸ் பகுதியில் தேயிலை வர்த்தக மையம் உள்ளது. இங்கு வாரந்தோறும் மின்னணு முறையில் தேயிலை தூள் ஏலம்(இ–ஆக்சன்) நடைபெற்று வருகிறது. அதன்படி மின்னணு ஏல முறையில் தேயிலை தூள் மற்றும் தேயிலை விற்பனை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

இதில் டஸ்ட் ரக தேயிலை தூள் 2 லட்சத்து 85 ஆயிரத்து 912 கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 90 ஆயிரத்து 386 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இதன் விற்பனை மதிப்பு கடந்த வாரம் 85 சதவீதமாக இருந்தது. இந்த வார மதிப்பு 67 சதவீதம் ஆகும். இது கடந்த வாரத்தை விட 18 சதவீதம் குறைவு ஆகும்.

விற்பனை குறைவு

கடந்த ஏலத்தின் சராசரி விற்பனை 99 சதவீதத்தை விட, இந்த வார சராசரி விற்பனை 96.98 சதவீதமாக குறைந்து உள்ளது. அதாவது கடந்த வாரத்தை விட 2.2 சதவீதம் குறைவாக விற்பனையானது. இதன் விற்பனை மதிப்பு ரூ.1 கோடியே 84 லட்சத்து 63 ஆயிரத்து 634 ஆகும்.

இதேபோல் இலை ரக தேயிலை 2 லட்சத்து 11 ஆயிரத்து 850 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 6 ஆயிரத்து 790 கிலோ ஏலம் மூலம் விற்பனையாகி உள்ளது. இதன் விற்பனை மதிப்பு கடந்த வாரம் 74 சதவீதமாக இருந்தது. இந்த வார மதிப்பு 50 சதவீதம் ஆகும். இது கடந்த வாரத்தை விட 24 சதவீதம் குறைவு ஆகும்.

ரூ.2 கோடியே 85 லட்சம்

கடந்த விற்பனை சராசரி 97.12 சதவீதமாக இருந்தது. இந்த வார விற்பனை 94.70 சதவீதமாக சராசரி விகிதம் ஆகும். இது 2.42 சதவீதம் குறைவு ஆகும். இந்த ரகத்தின் விற்பனை மதிப்பு ரூ.1 கோடியே 1 லட்சத்து 13 ஆயிரத்து 13 ஆகும்.

தூள் மற்றும் இலை ரக தேயிலை ஏல விற்பனையின் ஒட்டு மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 85 லட்சத்து 76 ஆயிரத்து 647 ஆகும். இது கடந்த வாரம் ரூ.4 கோடியே 40 லட்சத்து 47 ஆயிரத்து 51 இருந்தது.

இந்த தகவலை கோவை தேயிலை தூள் ஏல நிலைய மேலாளர் பிரபாகரன் தெரிவித்தார்.

**பந்தலூர் அருகே வாழை தோட்டத்தை சூறையாடிய காட்டு யானை**

பந்தலூர்,

பந்தலூர் அருகே வாழை தோட்டத்துக்குள் புகுந்து ஒற்றை காட்டு யானை அட்டகாசம் செய்ததால் சுமார் 50-க்கும் மேற் பட்ட வாழைகள் சேதம் அடைந்தன.

ஒற்றை யானை அட்டகாசம்

பந்தலூர் தாலுகா ஓர்கடவு பகுதியை சேர்ந்தவர் மொய் தீன். இவர் தனது தோட்டத்தில் வாழை விவசாயம் செய்து வருகிறார். இந்த நிலையில் ஒற்றை காட்டு யானை குடியி ருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பெரும் அட்டகாசம் செய்து வருகிறது. இதனால் சம்பந்தப்பட்ட வனத்துறைக்கு பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து, வனத்துறை யினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து ஒற்றை யானையை விரட்டினார்கள். தற்காலிகமாக குறிப்பிட்ட இடத்தை விட்டு சென்ற ஒற்றை யானை இரவு நேர

மானதும், ஏற்கனவே நின்றி ருந்த இடத்துக்கு வந்து விடுகின்றன. சில நேரங்களில் குடியிருப்புகளை முற்றுகை யிட்டு பொதுமக்களை பீதி அடைய வைத்து விடுகிறது. இதேபோல் மொய்தீனின் வாழை தோப்புக்குள் ஒற்றை யானை புகுந்து விடிய விடிய அங்கு நின்று இருந்த வாழை களை ருசி பார்த்தது.

50 வாழைகள் சேதம்

இதுகுறித்து தகவலறிந்த விவசாயி மொய்தீன் மற்றும் அக்கம்பக்கத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஒற்றை யானையை விரட்டும் பணியில் ஈடுபட்டனர். இத னால் வெகுநேரத்துக்கு பிறகு ஒற்றை யானை அப் பகுதியை விட்டு சென்றது. இதில் சுமார் 50-க்கும் மேற்பட்ட வாழைகள் சேதமானது தெரிய வந்தது.
எனவே சம்பந்தப்பட்ட வனத்துறையினர் பாதிக்கப் பட்ட விவசாயி மொய்தீனுக்கு உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும் என ஓர்கடவு பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர். மேலும் ஒற்றை யானை மீண்டும் குடியிருப்பு மற்றும் விவசாய பகுதிக்குள் நுழையாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ள னர்.

## பச்சை தேயிலைக்கு வார விலையாக ரூ. 17 நிர்ணயம்

மகசூல் குறைவு எதி ரொலியாக பச்சை தேயி லைக்கு வார விலையாக ரூ.17 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

65 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 65 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை தொழிலையே நம்பி உள்ளனர். தேயிலை தோட்ட தொழிலாளர்களும், தேயிலை தொழிலை நம்பி இருப்பதால் மாவட்டத்தின் பொருளா தாரத்தில் தேயிலை தொழில் முக்கிய பங்கு வகிப்பதாக கூறப்படுகிறது.

சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் அறு வடை செய்யும் பச்சை தேயி லையை வாங்கும் தேயிலை தொழிற்சாலை என்று கூறப்படும் சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

தேயிலை வாரியம் அறிவுரை

தேயிலை தொழிற்சாலை அருகில் இல்லாத விவசாயிகள் பச்சை தேயிலை ஏஜெண்டுகள் மூலமாக தொழிற் சாலைக்கு அனுப்பி வருகின்றனர். இவ் வாறு அனுப்பும் பச்சை தேயிலைக்கு வார விலை மற்றும் மாத விலை வழங்கப் படுகிறது. கடந்த சில மாதங் களாக ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு தொடர்ந்து விலை உயர்வு இருந்ததால், பச்சை தேயிலைக்கும் விலை உயர்வு ஏற்பட்டு வந்தது.

மேலும் தேயிலை வாரியம் ஒவ்வொரு தொழிற்சாலையும் தங்கள் தேயிலை தூளை குறைந்த பட்சமாக 80 ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கியது. தற்போது

நீலகிரி மாவட்டத்தில் பனியின் தாக்குதல் காரணமாகவும், வறட்சியின் காரணமாகவும் பச்சை தேயிலையின் மகசூல் குறை வடைந்து வருகிறது. இதன் காரணமாகவும் தேயி லைக்கு விலை உயர்வு ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 2-க்கான ஏலத்தில் தேயிலை தூளுக்கு விலை குறைவு ஏற்பட்டது. இதன் எதிரொலியாக கடந்த 19-ந் தேதி சனிக்கிழமை சாதாரண வகை பச்சை தேயிலை ரூ.17 முதல் ரூ.18 வரை கொள் முதல் செய்யப்பட்டது. பி பிரிவு தேயிலை ரூ.19-ல் இருந்து ரூ.21 வரையிலும், ஏ பிரிவு ரூ.21-ல் இருந்து ரூ.25 வரையிலும் விலை கொடுக்கப் பட்டது.

**வறட்சி மாவட்டமாக அறிவித்து பயிர்பாதித்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

மதுரை மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்கக்கோரி உசிலம்பட்டியில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்டத்தில் எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் விவசாயமே அடியோடு பாதித்துள்ளது. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த நிலையில் மதுரை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கக்கோரி செல்லம்பட்டி வேளாண்மைத்துறை அலுவலகம் முன்பு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணை தலைவர் தேவராஜ் தலைமை தாங்கினார். ஒன்றிய தலைவர் முத்துப்பேயாண்டி, ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி, ஒன்றிய பொருளாளர் ரத்தினம், மாவட்ட துணை செயலாளர் சீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நெல் பாதித்த விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும். கரும்பு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க வேண்டும். தண்ணீர் இல்லாததால் விவசாயம் செய்யாத மானாவாரி நிலம் ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும், பசும்பால் ஒரு லிட்டருக்கு ரூ.25 வீதமும், எருமைப்பாலுக்கு ரூ.35 வழங்க வேண்டும் என்பன உள்பட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. மேலும் மாட்டுத்தீவனங்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் வற்புறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த கணேசன், கனிராஜா, கருப்பசாமி, பரமன், ஜெயராஜ், படித்துறை, குருசாமி, செல்லக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரையூர்

சேடபட்டி தாலுகா அலுவலகம் முன்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பாக ஆர்ப்பாட்டம் நடந்தது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தாலுகா செயலாளர் முருகன், நிர்வாகி வீரமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## சிவகங்கை மாவட்டத்தை வறட்சி பகுதியாக அறிவிக்கக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை மாவட் டத்தை வறட்சி பகுதி யாக அறிவிக்க கோரி காரைக்குடி, திருப்புவனத் தில் விவசாயிகள் ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டம்

சிவகங்கை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறி வித்து, வறட்சிநிவாரண பணி களை உடனே தொடங்க வேண்டும். ஒவ்வொரு தாலு காக் களிலும் பாதிக்கப்பட்ட விவசாய பகுதிகளை மத்திய நிபுணர் குழுவை அனுப்பி ஆய்வு மேற்கொள்ள வேண் டும் என்பது உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை வலி யுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கம் ஆகியவற் றின் சார்பில் சிவகங்கை மாவட் டத் தில் காரைக்குடி, சிவகங்கை, தேவகோட்டை உள்ளிட்ட 7தாலுகா அலு வலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காரைக்குடியில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு விவ சாய சங்க தாலுகா செயலாளர் கண்ணன், விவசாய தொழி லா ளர் சங்க தாலுகா செயலா ளர் வெங்கடேசன் ஆகியோர் தலைமை தாங்கினர். சங்க மாநில குழு உறுப்பினர் வக்கீல் சந்திரசேகரன் சிறப்புரையாற்றி னார். மேலும் கோரிக்கைளை விளக்கி தாலுகா தலைவர் ராஜேந்திரன், பொருளாளர் பன்னீர்செல்வம், துணைத் தலைவர் செல்லையா, துணை செயலாளர் மணிமுத்து, ஏ.எல்.காளிமுத்து, கரு.மருதன், வீர.அரசப்பன், உலகப்பன், சுப்பையா, முத்து, கருணாநிதி ஆகியோர் பேசினர்.

திருப்புவனம்

இதேபோல் திருப்புவனத் தில் நடைபெற்ற ஊர்வலம்– ஆர்ப்பாட்டத்துக்கு தாலுகா செயலாளர் பழனிவேல் தலைமை தாங்கினார். பாஸ் கரன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை மாவட்ட குழு உறுப்பினர் ஜெயராமன் தொடங்கி வைத்தார். ஆர்ப் பாட் டத்தில் தமிழ்நாடு விவ சாய தொழிலாளர்சங்க மாவட்ட செயலாளர் தண்டி யப் பன் சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் காசி முனி யாண்டி, ஈஸ்வரன், செந்தி வேல், முத்தையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் சிவகங்கையில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு விவ சாய சங்க ஒன்றிய செய லாளர் மாணிக்கம், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட துணைத்தலைவர் திருநாவுக் கரசு ஆகியோர் தலைமை தாங் கினர். மாவட்ட செயலா ளர் ஆதிமூலம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் கந்தசாமி மற்றும் இக்னேஷியஸ், ராஜேந்திரன், அழகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இளையான்குடி

இதே போல் இளையான்குடி தாலுகா அலுவலகம் முன்பு தாலுகா தலைவர் ராமன் தலைமையிலும், செயலாளர் லட்சு மணன் முன்னிலையிலும், திருப்பத்தூர் தாலுகா அலு வலகம் முன்பு மாணிக்கம் தலைமையிலும், மானாமதுரை தாலுகாஅலுவலகம் முன்பு ஆண்டி தலைமையிலும், தேவகோட்டை தாலுகா அலுவலகம் முன்பு செல்வராஜ் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சிவ கங்கை மாவட்டத்தில் ஏற்பட் டுள்ள விவசாய பாதிப்புகளை போக்க மத்திய அரசின் பேரி டர் நிதியில் இருந்து ரூ.ஆயிரம் கோடி வழங்க வேண்டும். கடும் வறட்சியால் விவசாய தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட வேலையிழப்பின் காரண மாக அவர்களின் துயரத்தை போக்க விவசாய தொழி லா ளர் குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்க வேண் டும். இந்த ஆண்டு சாகுபடி செய்யாமல் இருக்கும் தரிசு நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்க வேண் டும்.

கடன் தள்ளுபடி

நடப்பு ஆண்டில் விவசாயத் திற்காக விவசாயிகள் பெற்ற அனைத்துவங்கி கடன்களை யும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். வறட்சியால் பாதித்த நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரமும், கரும்பு, வாழைக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயி ரமும், வெற்றிலை கொடி கால் பயிருக்கு ரூ.2 லட்சமும், மிளகாய், பருத்தி, கத்தரிக்கு ஏக்கருக்கு 25ஆயிர மும், தென்னை மரம்ஒன்றுக்கு ஆயி ரம் ரூபாய் வழங்க வேண் டும். மாவட்டம் முழுவதும் 100 நாள் வேலையை 150 நாள் வேலையாக உயர்த்தி சம்பளம் ரூ.132 வழங்க வேண்டும்என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகள் வலியுறுத்தப் பட் டது.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்ககோரி விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்ககோரி விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ரூ.25 ஆயிரம்

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து கருகிய விவசாய பயிர்களுக்கு ஏக்கர் 1–க்கு ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும், வேலை இழந்த விவசாய தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கவேண்டும், மத்திய அரசு தமிழகத்தை தேசிய பேரிடராக அறிவித்து ரூ.1000 கோடி நிதி வழங்க வேண்டும், வறட்சியால் பாதித்து தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை

வலியுறுத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருகிய பயிரின் சேதத்தை குறிப்பிட்டு மனுவுடன், ராஜபாளையம் தாசில்தார் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க ராஜபாளையம் மேற்கு ஒன்றியம் சார்பில் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் தாசில்தார் அலுவலகம் முன்பு நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க மேற்கு ஒன்றிய செயலாளர் நீராத்திலிங்கம், விவசாய தொழிலாளர் சங்க மேற்கு ஒன்றிய செயலாளர் கனகராஜ் தலைமை தாங்கினர். விவசாய சங்க ஒன்றிய தலைவர் மலைக்கனிராஜா, விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய தலைவர் குருவு முன்னிலை வகித்தனர். விவசாய சங்க மாவட்ட தலைவர் குருசாமி கலந்து கொண்டு பேசினார்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி கிழக்கு ஒன்றிய விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. விவசாயிகள் சங்க ராஜபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், விவசாய தொழிலாளர் சங்க ராஜபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முனியாண்டி, விவசாய சங்க ஒன்றிய தலைவர் அம்மமுத்து, விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய தலைவர் பழனிச்சாமி முன்னிலை வகித்தனர். மாவட்டக்குழு மாரிமுத்து நன்றி கூறினார்.

## மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மணிமேகலை விருதுக்கு விண்ணப்பிக்கலாம் 28–ந் தேதி கடைசிநாள்

மகளிர் சுய உதவிக்குழுக்கள் மணிமேகலை விருதுக்கு விண்ணப்பிக்க 28–ந் தேதி கடைசிநாளாகும்.

இது குறித்து மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

மணிமேகலை விருது

2011–12–ம் ஆண்டுக்கு சிறப்பாக செயல்படும் சுய உதவிக்குழுக்கள், மற்றும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் மணிமேகலை விருது தமிழ்நாடு அரசால் வழங்கப்பட உள்ளது. மாநில அளவில் 5 சிறந்த பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.3 லட்சமும், 10 சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ.1 லட்சமும் மணிமேகலை விருதாக வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் ஒரு சிறந்த பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புக்கு ரூ.1 லட்சமும், 3 சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் மணிமேகலை விருது வழங்கப்படும். வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுயஉதவிக்குழுவுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்.

நிபந்தனைகள்

சிறந்த சுய உதவிக்குழுக்கள் தேர்வுக்கு 01–07–11 அன்று குழு தொடங் கப்பட்டு 4 ஆண்டுகள் முடிந்து இருக்க வேண்டும், 2–ம் தரம்பிரித்தலில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும், 01–07–11–க்கு முன் குழு நிர்வாகிகள் குறைந்தபட்சம் ஒரு முறையாவது மாற்றப்பட்டு இருக்க வேண்டும். வங்கி, நிதி நிறுவனங்களிடம் இருந்து குறைந்தபட்சம் 3 முறை கடன்பெற்று தவணை தவறாமல் செலுத்தி இருக்க வேண்டும். 01–07–11 அன்று பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு தொடங்கப்பட்டு 2 ஆண்டுகள் முடிந்து இருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு பகுதியில் உள்ள அனைத்து சுய உதவிக்குழுக்களும் இந்த கூட்டமைப்பில் உறுப்பினராக பதிவு செய்து இருத்தல் வேண்டும். 01–07–09 முதல் 30–06–11 வரையிலான காலங்களில் குறைந்தபட்சம் 20 கூட்டங்களை பஞ்சாயத்து அளவிலான குழு கூட்டமைப்பு நடத்தி இருக்க வேண்டும். சிறந்த பஞ்சாயத்து அளவிலான குழு கூட்டமைப்புகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மாநில மற்றும் மாவட்ட தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்படும்.

விண்ணப்பிக்கலாம்

இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு தகுதியான பஞ்சாயத்து அளவிலான குழு கூட்டமைப்புகள் மற்றும் சுயஉதவிக்குழுக்கள் கிராமப்புற பகுதிக்கு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும், நகர்ப்புற பகுதிக்கு மகளிர் திட்ட அலுவலகத்திலும் விண்ணப்பங்களை பெற்று விவரங் களை பூர்த்தி செய்து வருகிற 28–ந் தேதிக் குள் தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் தெரிவித்து உள்ளார்.

**தினகரன்**

## ஆத்தூர் வேளாண் கூட்டுறவு சங்கத்தில் `80 லட்சத்திற்கு பருத்தி விற்பனை

ஆத்தூர், : ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில் `80 லட்சத்திற்கு பருத்தி ஏலம் போனது.
சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமையன்று பருத்தி ஏலம் நடக்கிறது. இதில், நாமக்கல், சேலம், விழுப்புரம், பெரம்பலூர், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களின் பருத்திகளை விற்பனைக்கு கொண்டு வருவர்.
சங்கத்தில் ஏலம் மூலம் பருத்தி விற்பனை செய்யப்படும். இவை சேலம், ஈரோடு, திருப்பூர்,

புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த நூற்பாலையினரும், பருத்தி வியாபாரிகளும் கொள் முதல் செய்வார்கள். நேற்று இந்த சங்கத்திற்கு வந்திருந்து 1800 மூட்டை பருத்திகள் `80 லட்சத்திற்கு விற்பனையானது.

பருத்தி விலை விபரம் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ஒன்று `3,898 முதல் `4296 வரையிலும் டிசிஹெச் ரகம் `4889 முதல் `5311 வரையிலும் விற்பனையானது. பொங்கல் பண்டிகை முடிவடைந்த நிலையில் பருத்தி விலை உயரும் வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நெல் உற்பத்தியில் முதலிடம் பெண் விவசாயிக்கு விருது




நெல்லை : நெல்லை பெண் விவசாயிக்கு மத்திய அரசின் கிருஷிகர்மான் விருது கிடைத்துள்ளது. நெல்லை மாவட்டம், சிவகிரி தாலுகா, வாசுதேவநல்லூரைச் சேர்ந்தவர் அமலராணி. இவரிடம் உள்ள 5 ஏக்கர் நிலத்தில் நெல், கரும்பு, தென்னை விவசாயம் செய்து வருகிறார். 2011,12ம் ஆண்டில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் செய்துள்ளார். திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு 5 லட்சம் ரொக்கப் பரிசும், தங்கப் பதக்கமும் வழங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனால் பயிர் விளைச்சல் போட்டியில் அமலராணி கலந்து கொண்டார். இவரது வயலில் ஒரு ஹெக்டேருக்கு 18 ஆயிரத்து 143 கிலோ மகசூல் கிடைத்தது. அதாவது 12 ஆயிரத்து 95 கிலோ அரிசி கிடைத்தது.

ஆனால் முதல் பரிசு பெறும் வாய்ப்பு தவறிப் போனது. மதுரை மாவட்டத்தை சேர்ந்த ஆண் விவசாயி ஒருவர் திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் ஈட்டி தமிழக அரசின் முதல் பரிசை பெற்று விட்டார். அதே நேரத்தில் மத்திய வேளாண்மை அமைச்சகம், உணவு உற்பத்தியில் மாநில அளவில் சாதனை படைக்கும் ஆண், பெண் விவசாயிகளுக்கு ஒரு லட்சம் ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றும் வழங்குவதாக அறிவித்துள்ளது.

கடந்த 15ம் தேதி டெல்லி ராஷ்டிரபதி பவனில் நடந்த வ¤ழாவில் அமலராணிக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ரூ.1 லட்சம் ரொக்கப்பரிசும், பாராட்டுச் சான்றும் வழங்கினார். விருது பெற்று நெல்லைக்கு பெருமை சேர்ந்த விவசாயி அமலராணிக்கு நெல்லை கலெக¢டர் சமயமூர்த்தி பாராட்டு தெரிவித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சௌந்தர்ராஜன், உதவி இயக்குநர் ( தர கட்டுப்பாடு) கஜேந்திரபாண்டியன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். அமலராணியின் கணவர் திருமலை கணேசன் டாக்டர். டாக்டர் குடும்பமாக இருந்த போதிலும் விவசாயத்தில் அதிக ஆர்வம் காட்டியதால் விருது பெற முடிந்தது என அமலராணி தெரிவித்தார்.